3153
X.D:10.

உ

ஓம்.

# சிவஞானதீபம்.

இஃது,

தேவைப்பதியாகிய

ஸ்ரீ இராமேச்சரத்தைச் சேர்ந்த

பாம்பன்

சா அப்பாவுபிள்ளையென்னும்

குமரகுரு தாசரவர்களால்

அருளியது.

முதற்பதிப்பு - ௧000 காபிகள்.

இதை

சென்னபட்டணம்.

பாரதசெட்டி அண்டு கம்பினியாரவர்களது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர்

அவர்களின்

அன்பளிப்பு

GF
R6722 13,1
H6

7153 / (1850)

உ

## இந்நூலாக்கியோரா லியற்றிய

## நூல்களிவண.

௧. ௩௨ - வியாசங்களாய், குரு சிஷ்யசம்வாத ௧000- கேள்வி யுத்தரங்களா யமைத்த திவோதய சடாக்ஷரோவ தேசமென்னுஞ் சிவஞான தேசிகமாகிய பெருநூல்.

௨. ஷெ நூலின் ௨௧ - வது ஜீவவதையைக் குறித்த வியாசத்தை ௨0௫-செய்யுளாக வமைத்தது.

௩. ஷண்முக கவசம் ௩0.

௪. ஞானவாக்கியம் ௧0௪.

௫. வேதாந்தசித்தாந்த சமரசதிருப்பாடல்கள் ௧௨௭.

௬. பரபரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்

௭. திருவலங்கற் றிரட்டு.

௮. திருத்தொடையல்

௯. இந்நூலாகிய சிவஞானதீபம்

---

சகலகலாவல்லபன் சரணம் வாழ்க.

# பிரகடனம்.

குருபரனருள்பற்றி குமரகுருதாச ரவாகளால் உலோகோபகாரமா யருளிய நூல்களில் அடியிற்கண்ட புத்தகங்களை மட்டும் இப்பொழுது அச்சிட்டிருக்கிறது. தேவையானோர் அடியிற்கண்ட கிரயத்திற்கு அடியிற் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தபாற்செலவு பிரத்தியேகம். ரிப்பிளைக் காரிகளுக்கே பதிலெழுதக்கூடும். புஸ்தகங்கள் வாலியூ பேயபிலாகவு மனுப்பப்படும்

௧00 - பிரதி மொத்தமா யெடுத்துக் கொள்பவாகட்கு ௧0-பிரதி இனமாகும்

(௧) தமிழ் சிவஞானதீபம் புஸ்தகம் ௧ - க்கு விலை அணா - ௩.

(௨) „ சிவஞான தேசிகம் ௧ - வது கடவுளைக் குறித்த வியாசம் புஸ்தகம ௧ - க்கு விலை அணா - ௩.

இப்புத்தகம் அவசியமான ௩-படங்களுடன் குருசிஷிய சம்வாதமாய் வசனரூபத்தி லுள்ளது விஞ்ஞானசாரமா யிருக்கும்.

(௩) „ ஷை ௨-வது தேவாகளைக்குறித்த வியாசமும், ௩ - வது பரமசிவ மென்பதைக் குறித்த வியாசமும் அடங்கிய புஸதகம் ௧-க்கு விலை அணா - ௩.

இப்புத்தகம் தேவதைகளுடையவும் பரமசிவனுடையவும் தன்மையைத் தெளி

வாய் விளக்கும். சைவசமயிகட்கு மிகப் பிரயோஜனம்.

(௪) ,, இராமசேது மான்மிய வசனம் புஸ்தகம் க-க்கு விலை அ-௪

இப்புத்தகம் மஹாக்ஷேத்திரமாகிய இராமேச்சுரத்தின் மூர்த்தி தலம் தீர்த்தமென்னு மான்மியங்களை விளக்கும்.

(௫) ,, பரபரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் புஸ்தகம் க-க்கு விலை பை-௯

இப்புத்தகம் ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுள் பேரில் ஸ்தோத்திரமாயும் இங்கிலீஷ்நோட்டுமாதிரியாயு முள்ளது

(௬) ,, அகராதி ஷண்முக கவசமும், குமாரபரமேஸ்வரஸ்தோத்ரமும் புஸ்தகம் க-க்கு விலை பை-௬.

இங்ஙனம்,

சா அ. முருகையாபிள்ளை

தெற்குவீதி,

பாம்பன்.

உ

# பீடிகை.

தேன்மின்.

உலகடங்கலும் பிரகாசிக்கத்தக்க சூரியனை அந்தகன் காணாததுபோல கடவுள் பரமாத்மாவாய் எங்கு நிறைந்திருந்த போதிலும் அதை அஞ்ஞானியாகிய அந்தகனுங் காண்பதில்லை அவனுக்குள்ள மாமிசமாகிய விழியானது, ஜடரூபத்தைமட்டும் நோக்கும் அப்படி நோக்குவதிலும இருட்டுக்குள் யாதொன்றையு நோக்கா தந்தகாரமேயாகும் இவ்வித கேவல விழியையுடைய மனிதரிற் சிலா, அதிசூட்சும ஸ்வரூப அகோசர மாயுள்ள தெய்வத்தை நோக்கறகியலாமல், அஃதில்லையெனக்கண்ணிடந்து கூறுவா அவாகட்கும், பரமாத்மாவைத் தரிசிக்க நினைப்பவாகட்கும் இருக்கிற பாசமான இருளைத தனனகத்தில் ஒழிக்கற்கு என்றுங் கெடாதேற்றக்கூடியது சிவஞான தீபம் ஒன்றேயாகும் அந்தத் தீபமாகிய ஞானதிருஷ்டியைப் பெறுவதற்கான சாதகானுஷ்டான மெல்லாம், இந்நூற்கண் வெளியிட்டிருப்பதால், இதற்குச் சிவஞானதீபமெனச் சிறப்புப்பெய ருறுத்தலாயிற்று. வேதாந்த சித்தாந்த சமரசமாய் பரமாசிரியர் பக்குவமுள்ள சீடனுக்கு இரகசியமாயுணாக்கும் ஞானசிவ ராஜயோக அப்பியாசங்களையே செய்யுண் முதலிய கருகலாய்ச் சொல்லாமல், எவ்வருக்கு மெளிதி லுபயோக மாம்பொருட்டு வசன ரூபத்தில் போந்தமட்டும் வெளிப்படையாய்ச் சொல்லியிருப்பதால், இத்தை நன்குமதித்து பலருமுணரும்படி போதிப்பதுமன்றி மேன்மேலும் அச்சிட்டுக் கொடுக்கவுமுதவுவாரகளென்று விவேகிகட் கறிவிக்கப் படுகிறது. அதனால் தக்க சுகிர்த மடைவாரகளென்று இங்ஙனந் துணிபு கூறுகின்றேம்.

குமரகுருபீகாமான் திருவடிவாழ்க.

(7௬௰)



# சாத்துகவிகள்.

துறையூரி லெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ ல ஸ்ரீ

கைகாட்டிசுவாமிகள் மாணாக்க ரொருவராகிய

**அ பொன்னம்பலத்தையா அவர்கள்**

பன்னிருசீர்க்கழிநெடில்டி யாசிரியவிருத்தம்.

பூத்தே னுகுக்கும் பொழிற்றேவைப்
புனிதப் பதியிற் பாம்பனில்வாழ்
புகழ்சேர் சாத்தன் பெருந்தவத்தின்
பேறாய் வந்தோ னானந்தக்
கூத்தே நடிப்போர்க் கோங்காரக்
குறிநற் பொருளை யுணர்த்தியருள்
குரவ னெமையாள் குமரேசன்
குலவு திருத்தா ளைநோக்கிற்
கோத்தே மகிமை குணக்குன்றங்
கோதி லாக வகம்படிய
குலநன் மரபன் குமரகுரு
தாசப் பெயரோன் குவலயத்தோர்
பாத்தேன் பருகி யகங்குளிரப்
பண்ணி னாற் சிவஞான
பகர்தீ பமென வோர்நூலைப்
பார்க்கப் பார்க்க வெளியாமே. (க)

துறையூர்ஸ்கூல் - தமிழ்ப்பண்டிதர்
**நாகலிங்கம்பிள்ளை யவர்கள்.**

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மணியீட்டுந் திரையாழி சூலவுமிரா
மேச்சுரத்து வளங்கொள் பாம்ப
னணியீட்டு மகம்படிய குலதிலகன்
சாத்தப்ப னன்பாற் றேன்றி
பணியாற்று நிலமிசைப்பால் வடகலைக்குந்
தென்கலைக்கும் பயனு யுள்ளோன்
பிணிவீட்டும் வேற்குகனே யென்றுளங்கொள்
பெரும்பேறு பெற்று வாழ்வோன். (க)

பவஞானம் பாற்றுறுநற் குமரகுரு
தாசனெனும் பண்பின் மிக்கோ
னவஞானம் பரசமய மெனவுணர
வல்லார்க்கே யன்றி மற்றுந்
தவஞானம் பெறுமவர்க்கும் பெத்தத்தின்
மூழ்கியுறுந் தன்மை யோர்க்குஞ்
சிவஞான தீபமதை யேற்றுபுநன்
காவருளைத் தெரித்தான் மன்னோ. (உ)

துறையூர்
நந்திகேசுர சுவாமிகோவில
**கணக்கு - விசுவநாதப்பிள்ளை யவர்கள்.**

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூத்தப்பன் மலர்ச்சோலை புடைநெருங்கு
ராமீசத் துறைபாம்பன்

றேத்தப்பன் மலிநீற்றே னருளெய்து
மகம்படிமீ செம்மைச் சாதி
சாத்தப்பன் றருகுமர குருதாசப்
பெயர்புனைநற் றவத்தோன் செய்த
கோத்தப்பன் மணியனைய சிவஞான
தீபமிலார் குருட ராவார். (க)

---

துறையூர்-பெரியமடம் வீரசிமமாசனாதிபத்திய
ஆதிசிவப்பிரகாச சுவாமிக ளாதீனசிஷிய
பரம்பரையு ளொருவராகிய

## மாணிக்கவாசகஐயர்.

---

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தேன்பொலியுந் திவ்வியபன்மலர்ப்பொழில்சேர்
திருவிரா மீசப் பாம்பன்
வான்மலியு மருட்குமர னருளினகம்
படியமர பதனில் வந்து
கான்வலியு மிருளனைய பவங்கடப்பக்
காட்டுமிரு கரதீ பம்போற்
றுன்செய்லிக்குரு சாத்தப்பன் றருகுமர
குருதாச னருணூல் கேண்மோ. (க)

அருநூலொன் றியற்றினு னருந்தமிழா
லவனிதனி லறிவு ளோர்க்குக்
குருநூலிற் குழைந்தெழுந்து குவலயத்தோர்க்
குளமகிழ்வு கொள்ளை கொள்ள

மருநூலா மாமாயை யகன்றுமா
தவம்புரிந்து மல்கு முத்தி
தருநூலாஞ் சிவஞான தீபமெனும்
பேரொளியாய்த் தழைந்த தன்றே. (உ)

---

ஷை தமிழ்ப்பண்டிதர

நாகலிங்கம்பிள்ளை யவர்கள்

மாணாக்கரு ளொருவராகிய

ஒமாந்தூர

## பூ. மு. மாசிலாமணிபிள்ளை யவர்கள்.

---

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அசம்படிய குலதிலக சாத்தப்ப
னருள்குமர குருதா சன்றன்
மகம்படியந் தணர்குழூஉ திருவிரா
மேச்சுரஞ்சார் மகரந் தச்சே
தசம்படியந் தன்வயல்சூழ் பாம்பனெனும்
பெயர்ப்பதியி னினிதெய் தாவிச்
சகம்படியல் லுயிருய்யச் சிவஞான
தீபநூ றந்தான் மனனே. (௩)

---

இந்நூலருளிய குமரகுருதாசருக்கு
இளமையிற் றிராவிடம பயிற்றுவித்தவரும்
பாம்பன் தமிழ்ப்பாடசாலை உபாத்தியாயருமான
ஸ்ரீ மு. முனியாண்டியா பிள்ளையவர்கள்.

---

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆழிசூழுலகத்தி லானகலை வழுவின்றி
யாயுநெஞ் ஞறிவுவிஞ்சி
அகிலமிசை சந்ததந் தெளிவுபெற் றுயவுநல
லரனடிக் காளாகியுட்
பாழிலா தின்னன்பர் பத்திவழி முற்றவும்
பண்ணவர்கள் சொற்றவாறே
பகருமுறை யாவிரத கனிகண்டு சீனியின்
பண்பெலா மொன்றமுதமாய்
தாழிதனி விமேத்தி லுடைகின்ற தயிரொனச்
சஞ்சல விகாரமெவையும்
தள்ளவல சிவஞான தீபமெனு மொனபெயர்
தனைப்பெற் றிலங்கிநூலை
வாழிமலி சற்சனன் மாவிரத விற்பனன்
மதிகொளப் பாவுநிபுணன்
வசனரூ பத்தினில வகுத்தனன் குமரகுரு
மாவருட் டகமைகொண்டே. (௪)

பொன்னேறு மேனியில வெண்ணீ றிலங்கவும
பொங்குகுளிர் கங்கைவிதுவார்
புந்கிடையி லேபுனை திட்டவெழி லும்லாவும
பொதுநடமு செயதபரமல்

முன்னேறு கருணைகொண் டினியகவி மழைகொ
முழுக்கவற் காட்டவென்று [டு
முதுமறைக ணித்தமும் புகழ்பரப்பிரம்மகுரு
முருகவே டனனையென்றும்
தன்னூர கத்துழி யிருத்திப் படித்தருட்
டன்மைமிக வுற்றபொறைமா
நகவுடைக் குமரகுரு தாசனென நற்பெயர்
தனைக்கொண்டிவ் விகபரத்தும்
முன்னோ ரதிர்த்தநெறி வழுவின்றி யுட்பொரு
முற்றினுமு ணர்ந்துலகினோர் [ளை
முந்திநிலை கூடிடச் சிவஞான தீபநூன்
முற்றுறமொ ழிந்தனனரோ. (உ)

சாத்துகவிகள் முற்றிற்று.

ஓம்.

பராபரப் பரப்பிரம்மணே நமஃ

# சிவஞானதீபம்.

## காப்பு.

## பாயிரம்.

குறள்வெண் செந்துறை.

பொன்விசும் பிந்த்ரன் புதல்விதெய் வானை
அன்பன் முன்னோ னலரடி தொழுவாம். (௧)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஐயமில் லாத வேத மையதா யமல வோத்
தின், மெய்யதா யாதி மூல விந்துதாய் நாத மா
யென், தெய்வமாய விளங்கு மாறு சென்னிவே
டிணைவ ணைந்து, கையனுங் களப துண்டக் கட
வுளைக் கருத்தில் வைப்பாம் (௨)

குருதெய்வ வணக்கம்.

வேறு

பொறுமைநிசம புண்ணியங்கள் விரதமி யா
கம் பொருந்தினர்க்கும வருந்தினர்க்கும் போக
யோகம், நிறைவுநிலை யுறுபவர்க்கும் ஞேய ஞான
நிகழ்பவர்க்கு மருளிருக்கு நேச மாகி, இறுதி
யுவ கம்பலைக ளைவையு நூறி யென்னுளத்தி
லுவகையுடன் விளங்கா நிற்கும், அறுமுகவ
சிவசாமி யெனது தீர்த்த னெவ்னினைவ னுபயவடி
யகத்தில் வைப்பாம். (௩)

### நூற்பயன் முதலியவை.

பவமான கடல்கடக்க முடியா திங்கே பதை
பதைத்து வுழலுகின்ற கலுடச் சீவர், அவஞான
விருண்மறைக்கக் கிடக்குந் தன்னை யறிவதற்கு
வவ்விருளை யகற்று நிற்குஞ், சிவஞான தீப
மிதைப் படித்தோர் கேட்டோர் செப்பினவர்
சிந்தைதனிற் பதித்தோர் மற்றுந், தவமான
தெத்தையுமே முடித்தோ ராவார் சண்முகத்தி
னருள்கொண்டு சாற்றி னேனே. (ச)

### ஆக்கியோன் பெயர்.

வே று.

ஈறுநடு வாதிமுத லேதுமில தாகவே யென்று
முள பரன ளித்த, மாறுதல கொளாதநன் ஞூன்
மறையி னுட்பமாய் மருவுமுப நிடத மடுவில்,
ஊறிரத சாரமதை யுண்டுமுதி யோர்களு முறை
த்தவழி யேநுழைந்து, கூறினவ னிந்நூலே யுல
கோ ருணர்ந்துயக் குமரகுரு தாசன் மாதோ.()
பாயிர முற்றிற்று.

---

## நூல்

### பதிபசுபாச நீர்மை முதலியன.

---

### வாக்கியம்.

சாவ அண்ட பிண்ட சராசரங்கட்கும் ஆதி பிதாவாக
வுள்ள கடவுளொருவா என்றும் நித்தியமாயுண்டு. அவர்
அனுதியாயுள்ளவா. பரிசுத்தமுடையவா. பரிசுத்த ஞான
முடையவா. வேதங்களால் றுதிக்கபபட்டவா. சமான
ரகிதா. சத்து சித்து ஆநந்தமென்னு மூன்றையு மொருங்

கேபொருந்தி நாம ரூப பேதமாயுள்ள சமஸ்த சராசரங்களிலுஞ் சச்சிதாநந்த சொரூபமாய் நிறைந்தவர். அவரே பரமசிவம் என்கிற பரமாத்மா. அவரே பதி.

சர்வ புவனங்கட்கும் அவர் ஒரே தெய்வ மென்பதற்கு ஒரு ஞானியினுடைய ஞானதிருஷ்டியில் சகல அண்ட பிண்ட சராசரமுந் தோற்றப்பட்டு எல்லா ஆத்மாக்களுடைய எண்ணத்தையு மறிந்து திரிகால விவரமும் எச்சமயிகட்கும் வெளியிடுந் தன்மை யுண்டாவதாலும் அவர்களிடம் யாதோ ரற்புதத்தைக் காட்டப்படுவதாலுங் கண்டகாரணமே போந்த திருஷ்டாந்தம். இப்படியெல்லா ஆத்மாக்களும் ஒரே ஆத்மாவென்பதும் உண்மை பெறப்படும். அப்படிப்பட்ட ஆத்மாவாகியது.— பாசமாகிய மாயாகாரிய வசப்பட்டு பசுத்துவமான ஜீவாத்மா வென்றாகும். அதற்கே —அகர்த்தா, அணு, அறியாதவன், சுதந்தரஹீனன், கிஞ்சிக்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான், சைதன்யன், பிரகிருதி, புத்தி, பிராணன், சத்சத்து, புட்கலன், தேகி யென்ற பரியாய நாமங்களை நூல்க ளுவலும். இந்த ஜீவாத்துமா அநுதிநிதயமே.

மேலேசொன்ன அநுதிநிதய பரமாத்துமா வாகிய ஒரு சூரியனுடைய சாயையே சரீரங்களாகிய கடஜலங்க டோறுந் தோற்றுகிற பிரதி பிம்பங்களாகும். அந்தப் பிம்பந் தெளிவான ஜலத்திலேயே பிரகாசமாய்த் தோற்றும். ஸ்வபக்ஞானத்தை மாயாகாரிய இச்சையாலிழந்து இருண்மூடிய அக்ஞான ஆத்மாவுக்குத்தானே தோற்றுவதில்லை. தோந்த விவேக ஞானரூபமாவுக்கே தானாகிய பரமாத்மா தோற்றும். மேலுரைத்தபடி கசுமாலமாகத் தோற்றுவதாலும், ஜீவாத்மாக்களுக்கு யதார்த்தத்திலில்லாத நாமரூப பேதங்களுந் தோன்றின. கடமே ஸ்தூல சரீரமும், ஜலமே சூக்ஷ்ம சரீரமும், அத்திற்றெளிவே காரண சரீரமுமாம்.

ஒருகடஜல பிம்பங் கெட்டுப் போவதால், ஏனைய பிம்பங்களுங் கெட்டுப்போவதில்லை. அதுபோல் ஒரு ஆத்மாவுக்குள்ள சுகதுக்கம் ஒரு ஆத்மாவுக்கில்லை. எல்லாக் கடஜல பிம்பங்களுங் கெட்டுப்போயினும், பிரமமமாகிய பானு கெட்டுப் போவதில்லை. அதுபோல் ஜீவாத்மாக்களுக்குள்ள சுகதுக்கம் யதார்த்த பரமாத்மாவுக்கில்லை.

ஆனால் பரமாத்மாவாகிய பரமசிவம் மாயாகாரிய நிமித்தம் இந்திரஜால வித்தை செய்கிறவனைப்போல, அதாவது தானே மெய்போல காட்டும் மாயாவித்தையைத் தன்னுடைய பொய்யெனக்கண்டிருக்குஞ் செயலுடையானை யொப்ப ஆத்மாக்களை யிரட்சிக்கும் பொருட்டு சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் என்னுமைந்து கிருத்தியங்கட்கும் பிரமா விஷ்ணு ருத்ரன் மஹேஸ்வரன் சதாசிவன் என்னுமைந்து தேவதைகளா யிருந்து சுத்தமாயை அசுத்தமாயை சுத்தாசுத்தமாயை யென்கிற உபாதானத் திரயமாகிய முதற்காரணங்கள் மூன்றையுங் கொண்டு பரிபூரணமா யிருக்கிற (௧) தன்மையாகவும், இச்சாஞானக் கிரியைகளா யிருக்கிற (௨) முன்னிலையாகவும், மனம் புத்தி அகங்காரம் சித்தம் உள்ளம் அகாரம் உகாரம் மகாரம் பிந்து நாதம் பிரமாவாதி பஞ்சகர்த்தாக்களாக விருக்கிற (௩) படர்க்கையாகவு நின்று பிரேரிக்கத் தக்கதாகும். அவற்றுள் ௧-முதல்-௪-வரை ரூப முள்ளதாயும், ௫-வது ரூபாரூப முள்ளதாயும் விளங்கும். இந்தபஞ்சதேவதைகட்கு மேலதாய நிறைகுடிலை பரமாகிய ௬-வது அருவமாகும்.

இந்த ஆறு தன்மையும் ஏம பராபர பரப்பிரமமாகிய **அறுமுகச்சிவம்** ஆயும், அருவ நீங்கலாக ஏனையவைந்தும் **ஐமுகச்சிவம்** ஆயும், ஜீவேஸ்வர காரியநிமித்தம் ஒன்றே யிரண்டாய் விளங்கும். ஐமுகச் சிவத்திற் புராதனமாகிய அருவமுகம் பாகியரல்ல இரகசியத்துள்ளது. இதுவே பலதேவதைகளாகவும் விளங்கிற்று. அல்லாமல்,

திருவுருக் கொண்டருளிய அஷ்டாஷ்ட விக்ரக லீலைகளென்னுஞ் சிவபராக்கிரமமாகிய இலிங்கம், இலிங்கோத்பவம், முகலிங்கம், சதாசிவம், மஹாசதாசிவம், உமாமஹேஸ்வரம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்த்ரசேகரம், விருஷபாருடம், விருஷபாந்திகம், புஜங்கலளிதம், புஜங்கத்ராசம், சந்தியாநிருத்தம், சதாநிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்காவிசர்ஜனம், திரிபுராந்தகம், கல்யாண சுந்தரம், அர்த்தநாரீஸ்வரம், கஜயுத்தம், ஜ்வராபக்னம், சார்த்தூலஹரி, பாசுபதமூர்த்தம், கங்காளம், கேசவார்த்தம், பிக்ஷாடனம், சிம்மஹக்நம், சண்டேசாநுக்ரகம், தக்ஷிணாமூர்த்தம், யோகதக்ஷிணாமூர்த்தம், வீணாதக்ஷிணாமூர்த்தம், காலாந்தகம், காமாரி, லகுளீஸ்வரம், பைரவம், ஆபதோத்தாரணம், வடுகம், க்ஷேத்ரபாலகம், வீரபத்ரம், அகோராஸ்திரம், தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அஸ்வாருடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏகபாதத்திரிமூர்த்தம், திரிமூர்த்தித்திரிபாதம், ஏகபாதமூர்த்தம், கௌரீவரப்ரதம், சக்கிரதானஸ்வரூபம், கௌரீலீலாஸமன்விதம், விஷாபஹரணம், கருடாந்திகம், பிரம்ஹசிரச்சேதம், கூர்மசம்ஹாரம், மத்ஸ்யாரி, வராஹாரி, பிரார்த்தனாமூர்த்தம், இரக்தபிக்ஷாப்ரதானம், சிஷ்யபாவம் எனும் ௬௪ - அவசரங்களாகவும் விளங்கிற்று. விளங்கிய சிவம்.—காலத்திரயத்தும் அவதாரஞ்செய்ததென்பதில்லை. அம்சங்களானதேயுண்டு. அவதாரங்களிருந்தும், அம்சங்களிலிலாதுமாய் நிகழும். இதனால், அம்சங்களை யவதாரங்களென்று சொன்னாற்கள் பிதற்றுவது பிசகு.

இப்படிக்கான ஆதி யந்தியாயுள்ள சிவமாகிய சர்வேஸ்வரனுக்கு சர்வ பிரபஞ்சமும் ஸ்தூல வடிவாயுள்ள விஸ்வரூபமென்கிற ஸ்தூல வுடம்பாகும். சூக்ஷ்மவடிவாயுள்ள சர்வருக்குமய பிரபஞ்சமுஞ் சூக்ஷ்மவுடம்பாகும், காரண பிரபஞ்சமாகிய மாயையே காரணவுடம்பாகும்.

இத்தகைய அண்ட பிண்ட சராசர பிரபஞ்ச நாயகனு டைய சுவாசத்திலே காற்றி னியக்கத்தில் அணுக்களியங் கிக் கொண்டிருப்பது போல, அண்ட கோடிகளெல்லாம் அந்தரத் தியங்காநிற்கும். இன்னண காரியதனைத ஒருலீலை யாயுள்ள சாக்ஷாத் சிவசைதன்யமே, ஆன்மாக்க ணிமித்தம் அதாவது — பிரகிருதிமாயை வசப்பட்டு ஜனன மரண சாகரத்திற் கிடந்து வருந்தும் சிதாபாச ஜீவர்கட் கருளுறும் பொருட்டு முக்கியம் மூன்று விதமாக அதிஷ்டித்து விளங்கும். அவற்றுள் (க) சர்வஞூன்ய சர்வ வியாபக சர்வசாக்ஷி சர்வாநந்த ஞானறிவாகாச பிரம்மமயம். (உ) பாபநாசவரப்பிரசாத க்ருபானுக்ரக ஜென்மநாச ஐசுயமோக்ஷானுக்ரக அருட்கிருபா சடாக்ஷ காருண்ய அருளம்சம். (ந) கர்ம பாப நண்ட அகோர வக்ரதன புனாபிமரண புனாபிஜென்ம ந்தண்ட பாப கோபாக்கினி சொரூபம். இவற்றுள் மூன்றாவதாலே ஆத்மாக்களைத் தண்டித்தும், இரண்டாவதாலே அனுக்ரகித்துத் தம்மோடுயத் தக்க பலன்களைக் கொடுத்தும், முதலாவதாலே தம்மோடொன்றாய விளங்கும்படிக்குக் கடாக்ஷித்தும் வருவதாகும். இங்கே தம்மோடொன்றாய் விளங்கும்படிக் கென்றது — தமது பரமாத்மபோதம்போல ஜீவாத்ம போதமும் பேதமின்றிப் பிரகாசிக்கும்படிக் கென்றருத்தங் கொள்க. இதுவே அந்வைத நித்ய கைவல்ய முக்தி. இதையே சிவஐக்யமென்றுஞ் சொல்வது இவ்வித குணத்தால் ஐக்யமேயன்றி வேறில்லை. ஆத்மாவானது பிரம்மத்தோ டைக்யப்படுமென்று, ஏகான்ம வாதிகளாகிய சில அத்வைதிகள் முக்தி யிலக்கணங் கூறுவது முரணுகும். யாங்களோ கடவுளென்று ஈஸ்வரோபாசனையை நிஷேதித்துவிட்ட அவ் வேகான்மவாதிகளையும், இயமன் றன் னதிகாரத்தா னடாததுவானன்றோ. அதனால், அவாநின்றநிலை முத்தி யாகா.

## பிரமாணம்.

தாயுமான சுவாமிகள் பாடல்.

“பன்மு கச்சமய நெறிப டைத்தவரும்
யாங்க ளேகடவு ளென்றிடும்
பாதகத் தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெய்ம்
தருமனுமபடு மேம்பாகியாய்த்
தனி யிருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்சகாஞ்
சொன்ம யக்கமது தீர வங்கைசொடு
மோன ஞானமு துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகரகி பாநுவாயத்
தென்மு கத்தின்முக மாயி ருந்தருளு
மெய்ம்மு கத்தினையும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.”

“பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்.”

என்று திருவள்ளுவ நாயனார் சொன்ன குறட்படி; ஆன்மாக்கள் கர்த்தாவுடைய பதப்பிராப்தியை யடைந் திருப்பதே முத்தி. அதற்கு சுந்தர - நாயன்மார்கள் பெற்ற பேறும் பவிஷ்ட்ய பிரமாணம்: இவ்விதமே ஸ்ரீநந்தி கேஸ்வரர் மார்க்கண்டேயருக் கருளிய சதுர்யுக திரிகால வர்த்தமான உபாக்கியானத்து, முணர்த்துகின்றது. முக்தியிலக்கண விவரம் பின்னேவரும்.

ஆத்மாக்களைத் தண்டிப்பதென்பது, பாப நிவாரண காரியமாய் தண்டநாயகனாகிய காலரூத்திராதி தேவர்களாலும் அரசர் முதலியோராலும் இம்மையிலேனும் மறுமையிலேனும் தக்கபடி தண்டித்து நியாயங் கொடுப்பதாம். அப்படிச் செய்வதானது, பிள்ளைக்குற்ற பிணியைப் பிதாவானவன் பண்டிதனால் நீக்க முயல்வது போல அன்னியனைக் கொண்டு அன்னணை மாற்றுவதாம். இது கருணையே யன்றிக் கொடுமை யன்று. ஆனால், காத்தாவானவர் தன்னை யண்டினவர்கட்கும்மட்டும் கற்பகம் தாரித்திரத்தையும், ஜலந் தாகத்தையு நீக்கி வைப்பது போல, அருள்வதன்றி அண்டாதவர்கட் கருள்வதின்று. இது நிச்சயம். நிற்க;

ஈஸ்வரசிருஷ்டிகள் நசித்துவிடுமாயின் ஒருவருக்காவது ஜென்மமு நசியாது. ஏனெனில், அன்னமயகோசத்துக் குட்பட்ட உதிரம், மஜ்ஜை, மாம்சம், சாமம், என்பு, நரம்பு என்கிற ஆறுதத்துவங்களாலுள்ள ஸ்தூல மழியின் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற அந்தக்கரணங்களும், சக்ஷு, சுரோத்ரம், ஆக்ராணம், சிங்குவை, துவக்கு என்னுந் தன்மாத்திரைகளையுள ஞானேந்திரியங்களும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னும் கருமேந்திரியங்களும்; பிராணன், உதானன், சமானன், அபானன், வியானன் ஆகிய பிராணேந்திரியங்களென்னும் வாயுக்களுஞ்சேர்ந்து ஆக உ0-தத்துவங்களாலுமுள்ள சூட்சும வுடம்பையுடைய ஜீவாத்மாவால் யாதொரு காரியத்தை நினைத்தவண்ணம் நடத்த முடியாமல் செயலற்று மயங்குந்தன்மையாலாம். இந்தத்தன்மை சம்பவிக்கு முன்னமேயே, அதாவது:— ஸ்தூல மிருக்கும்போழ்தே அரிய தபங்களைச் செய்து வேண்டியபலனை ஜீவாக ளெய்த வேண்டும். அப்படி யெய்துவதற்கு, ஸ்தூலப்பிரபஞ்சமே துணையாக வேண்டியதாலும், ஸதூலமிழந்து செயலற்ற ஜீவன்கள் மீட்டும்

கடைத்தேறும் வண்ணம் ஸ்தூல சிருஷ்டி செய்யப்படுவ தாலு மென் றுயதத்துணாக.

ஸ்தூல சிருஷ்டிக்காகக் கருவி லுதயமாகும் ஆத்மா யாதொரு வித்துகளுட் பிரதமத்திலேயே * அங்குரம் உற்பத்தியாவதுபோல பிந்துவி லடங்கியிருந்து சுக்ல சுரோணித சம்பந்தத்தால் ஆசயத்துளிருந்து வளராநிற் கும். சுக்ல சுரோணித சம்பந்தத்தின் பேரிற்றான், ஆத்மா நுழைந்ததென்று சிலா அபிப்பிராயப்படுவது துணி பன்று. பிந்துவிலேயே உருவத்தைப் பாாக்கலாம்.

சிருஷ்டியில், ஆகாமியமாகிய புதிய வினைகளானது மரித்தவுடன் மந்திராத்துவா, பதாத்துவா, வாணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா வென்கிற ஆறத்துவாக்களிலுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணியபாபங் களாகிய சஞ்சிதமாகும். பிராரத்துவத்துக்கானதுபோக மீத சஞ்சிதம் பின்னேதொடரக் காத்திருக்கும். இதினால் புதிய ஆகாமியமே பிறவிக்கடலாய்ப் பெருகி வருந் தன் மையுளவால் விவேகியானவன பிராரத்துவத்தைத் தேவ கட்டளையென்று மயங்காமலனுபவித்து ஆகாமியத்தை அணுத்துணையேனுஞ் செய்யாதிருக்க வேண்டும். அப்ப டிச் செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்தவிருத்திகள் ௧௭-ம் ஜீவசிருஷ்டியனரோ.

விவரம்.

(௧) காமம். அதாவது --சகல வஸ்துக்களிலும் இச்சை.

(௨) குரோதம். அதாவது —சினம், அல்லது பிணக்கு.

(௩) உலோபம். அதாவது.—ஈயாமை, அல்லது கிரு பணம்.

(௪) மோகம். அதாவது —யாவற்றினு மோகிக்கும் ஆசை, அல்லது மயக்கம்.

* அங்குரமென்பது —முளை.

(௫) **மதம்.** அதாவது —செருக்கு, அல்லது கெர்வம்.

(௬) **மாற்சரியம்.** அதாவது —உறவா யிருந்து பகைத்தல், அல்லது பொருமை.

(௭) **இடும்பை.** அதாவது —உதாசனித்தல், அல்லது அவமதிப்பு.

(௮) **வேட்கை.** அதாவது:—பலவித ஆசை, அல்லது அவதூறு.

(௯) **ஈரிஷை,** அல்லது **இராகஷியம்.** அதாவது —தனக்கு வந்த துன்பு பிறருக்கு வர வெண்ணுதல்.

(௧0) **தர்ப்பம்.** அதாவது —நான் பெரியோன் எனக்கெவருஞ் சமானமில்லையெனல்.

(௧௧) **இராகம்.** அதாவது —பரஸ்திரீகமனம் விரும்புதல்.

(௧௨) **த்வேஷம்.** அதாவது —தனக்கபகாரம் புரிந்தவனுக்கு அவ்விதந் தானுஞ் செய்ய வெண்ணுதல்.

(௧௩) **டம்பம்** அதாவது —பிறாகாண அதிகமுஞ் செய்யும் விஷயம, அல்லது பொருந்தா தளித்தல்.

(௧௪) **அகங்காரம்.** அதாவது —தன்னையே பெரிதாய் நினைத்தெழுஞ்சித்தம்.

இந்தப் பதினான்கும் நசித்தால் பிறப்பிறப்பும் நசிப்பது உறுதிதான். இவை சிவ சிருஷ்டியல்ல, ஜீவசிருஷ்டியே யென்பதற்குப் பிராமாணியம் யாதெனில், சிவ சிருஷ்டியாகிய சராசர பிரபஞ்ச மானது பிரளயத்தி லழிகின்ற காலத்தும் ஜீவர்களுடைய ஜனன மரண மொழியாமற் பலத்தேறிக்கும. அந்தீர்ம்வாயாந்த வைகள், சிவசிருஷ்டியிருக்கும்பொழுதே மேற்குயின்ற ஜீவசிருஷ்டிகள் சூன்யப்படுமாயின் போக்குவரவற்ற மோக்க வீட்டைப் பெறுவரென்ப துள்ளதாலேயாம.

“[smudged] பாசமாகிய ஆணவமலம் பசுக்களாகிய ஜீவன்கட்கு அநாதி இயற்கை” என்று சின்னூற்கள் கதைப்பது குளறுபடையாகும். ஏனெனில், பிறவிக்குருடுக்கு மாற்றமில்லையெனல்போல் ஆணவமலம் அநாதியியற்கையாயின் அகலாதென்றும், அது அகன்று முக்தி பெறுந் தன்மையுள்ளதால் அநாதியியற்கையன்றென்றும், சுத்தாத்மாவினிடத்தில் அது இயற்கையாயிருக்க நியாயமில்லையென்றும், இயற்கைக் குணத்தால் அசுத்தாத்மாவான பசுவைச் செயற்கைக் குணங்கண்டு இருவினை நியாயத்துக்கு உட்படுத்தப் பதியாகிய கர்த்தாவுக்கும் நீதி செல்லாதென்றும் தாரகமாயுணரலாம். ஆயின், அந்தப் பாசமட்டும் பள்ளமுள்ள கண்ணே ஜலந்தங்கத் தடையிலா திருப்பதனைப், யாதொன்றில்ல இச்சையும் ஆத்மாவைப் பற்றிக்கொள்ளற்கு அநாதி நித்தியமாயுள்ளதென்பது துன்மையே.

**திருஷ்டாந்தம்.**

சிவஞான தேசிகரருளிய பஞ்சாக்ஷர

பதிபசு பாச விளக்கம்

௨௪-வது செய்யுள்.

‘ஆணவ மலமான் மாவுக
 * கநாதி யியற்கை யென்னில
ஆணவ மலத்தை நீங்கி
 யமலனை யடையா தாவி
ஆணவ மலமான் மாவுக
 கநாதியிற் செயற்கை யென்னில
ஆணவ மலத்தை நீங்கி
 யமலனை யடையு மான்மா.”

ஆதலால், யாதொரு ஜீவனை தனது சேர்ந்த பூர்வஜன்மத்தின் பின்னே தொலைக்கப்படும் திரோதாயி கைப்படாமல்

* அநாதியில் என்றது அநாதியில் இல்லாதவென்றும்.

ஈஸ்வரனது அருட்சத்தி வசப்பட் டருள்பெற்றுய்யற்கு அவர் திருவாக்கிய மாகிய வேதாந்த முடிவை சற்குரு முகமாக ஏற்று ஞானோதய மெய்தி பவத்தைத் நீக்க வேண்டும். இவ்வனுபவதற்கான சிவபுண்ணிய முத லிய வெதுவும் சற்குரு மூலமின்றிப் பயன்படா.

பிரமாணம்.

சிவ புண்ணியத் தெளிவு
கசஉ-வது செய்யுள்.

"புங்க மாகுருசிவ புண்ணியங் தேசிகா
தங்கள் வாக்குப தேசம தன்றியே
யிங்கி யற்றி னிரும்பய னில்லையாய
மங்கு மென்னும் வரன்புக லாகமம்"

சுலோகம்.

"தியாந மூலம் குரோர் மூர்த்திஃ
பூஜாமூலம் குரோஃப பதம்
மந்த்ரமூலம் குரோர் வாக்கியம்
முக்திமூலம் குரோஃ க்ருபா."

யாதொருவனுடைய ஞான பரிபாக திசையை ஈஸ்வர னறிந்து அவரே குருமூர்த்தமா யெழுந்தருளி வந்து உண் மையை யுணர்த்தாலு முணர்படார். அல்லதவரடியார்களைக் கொண்டுணர்த்தாலு முணர்படார். இது அவர் கருணைப்பிர வாக நியாயத்திற் பொதுவாயுள்ளது. மாயையின் பலனை, ஜீவனுகிய கிஞ்சிக்ஞ னிச்சிப்பான். ஈஸ்வரனுகிய சர்வ க்ஞ னிச்சியான். அதுபோல முத்தியன்றி மற்றதை யிச்சி யாத் தன்மை வாய்ந்தவனே பக்குவமுள்ள சீடனுவான். அவனே.—இந்நூலில் விளங்கும் இன்பத்தை அநுபூதி மின்றிப பெறற் கதிகாரி யாவான்.

இந்தப்பக்குவத்தையே - மந்தம், மந்ததரம், தீவரம், தீவரதரம் என்னுஞ் சத்திநிபாத நான்கினுள் முதிர்ந் தது தீவரதரமென்று சிறந்த சிவாகமங்கள் கூறும்.

முன்னம் பகர்ந்த பாசம் ஒன்றே தன்னையும் பசுவையும் சிவத்தையும் வெளிப்படாமல் ஆவரணித்துச் செம்பிற் களிம்புபோன்றும், பரிபாகத்தி னீங்குஞ் சத்தியுடைத்தாகவுமுள்ள (௧) ஆணவமாயும், சிருஷ்டி காலத்திலே காரியப்படுவதான சஞ்சிதமாதி மூவித (௨). கன்மமாயும், பிரபஞ்சத்தை மெய்யென்று ருசிப்பிக்கிற (௩) திரோதாயி யாயும், விஞ்ஞான கலருக்குத் தனு கரண புவன போகமும், பிரளயாகலருக்குஞ் சகலருக்குஞ் சுத்த தத்துவமா யிராநின்ற (௪) சுத்தமாயையாயும், பிரளயா கலருக்குஞ் சகலருக்குந் தனு கரண புவன போகங்களா யிராநின்ற (௫) அசுத்தமாயை யாயும் விளங்கும். இவைகளையே பஞ்சபாசமு மென்பர்.

அஷ்டவித்தியேசுரர், அணுசதாசிவர், சத்தகோடி மஹாமந்திரர் இவர்களே.—விஞ்ஞானகலர். இவர் ஆணவ மலமொன்றும், சுத்தமாயா போகமு முள்ளார். இவர் பக்குவத்தில் பரமசிவத்தால் அறிவினின்று திருவருளு திடப்பிக்க உற்ற ஒரு மலமொழிந்து இரக்ஷிப்படைவர்.

நூற்றுப்பதினெட் டுருத்திரர்களும் புவனகர்த்தாக்களுமா யிருப்பவர்.—பிரளயாகலர். இவர் ஆணவம் கன்ம மென்னு மலமிரண்டும், அசுத்தமாயா போகமு முள்ளார். இவர் பக்குவத்தில் பரமசிவம் மான் மழு சதுர்ப்புயம் காளகண்டம் திரிநேத்திரங்களுடைய திருமேனி கொண்டெழுந்தருளிவந்து அநுக்கிரகிக்க உற்ற இருமல மொழிந்து இரக்ஷிப்படைவர்.

பிரமன் விஷ்ணுமுதற் கிருமியீறாக வுள்ளார்.—சகலர். இவர் ஆணவம் கன்மம் மாயை யென்னு மலமூன்றும், பிரகிருதி தத்துவ தனு கரண புவன போகமு முள்ளார். இவர் பக்குவத்தில் பரமசிவம் மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல ஞானாசிரிய ரூபாதத்தமாய மானிடச் சட்டை சாத்தி ஜீவருடைய ஊனும் பேரும் ஒழி

க்க வேண்டி ஊரும் பேரு முருவுங் கொண் டெழுந்தரு ளி வந்து சத்திநிபாதமுறை கண்டு சமய தீக்ஷையாகிய சரியை யனுஷ்டிப்பும், விசேஷ தீக்ஷையாகிய கிரியா யோக அனுஷ்டிப்பும், நிருவாணதீக்ஷையாகிய ஞானமும் கிரமமா யனுக்ரகிக்க உற்ற மும்மல மொழித்து இரக்ஷிப் படைவார். இதில், விஷ்ணுவைச் சகலரிற் கூட்டற் கிடங் கொடாமல் வைணவாகமங்கள் கூறும். அது, எவ்வண மாயினும் இந்நூலுழி விளக்கும் ஞானத்திற கிழுக்கில்லை.

மேலே தனு வென்றது — ஸ்தூல மாகவும், சூட்சும மாகவும், காரண மாகவு மிருக்கும். அவைகட் காயுள் க்ஷணை முதலாக அநேகமுள. கரண மென்றது — அத் தனுவுக் கேற்ற பல விதமுள. புவன மென்றது —புவ னம் உஉ௪ -முள்ள நாடு நகரமும் புண்ய கனம சுவர் க்காதி பதங்களுமாயுள. போக மென்றது — கனமத் துக் கேதுவான உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, விழுங்குவன, நக்குவன, உடுப்பன, முடிப்பன, தரிப்பன, திமிர்வன, இடுவன, ஏற்பன, நடப்பன, சயனிப்பன, பார் டபன, கேட்பன, தாரம, தனயர், பந்து, மித்திரா, பொன, மணி முதலிய வுள.

முன்பு மொழிந்த பக்குவ மற்ற அபக்குவ ரொவாக்கும் ஒருக்காலு மாறாத முண்டாகா. ஏனெனில், சமஸ்தமும் பஞ்ச பூதியங்க ளாகவே காணப்படுகின்றன, அவைக ளென்று மியறகை யாகவே யுள்ளன; அவைகளை யாரும் ஆக்கி யளித்து மாயக்கக் கூடு மென்றெண்ணுத தகாது; அவைகளை யன்றி ஆத்மா வென்ப தொன்று சததா யென்றுமுள்ள தென்றுரைக்குஞ் சாஸ்திர சித்தாந்தங் களை நம்பத தகாது என உவாலம்புனஞ் செய்து அனு மானப் பிரமாணந்தான மடமையுற்றுத் தெய்வமில்லை யென்று திடச்சித்தமாய்ச் சாதிக்குந் தனியு நிரீச்சுர வாதியாகிய நாஸ்திகனிடத்திலேயுந் தெய்வ முண்டோ வில்லையோ வென்கிற ஐயந் தொலையாமற் சிந்தை சிங்கி

யடித்தல்போற றெய்வ முண்டென்கிற ஆஸ்திக னிடத்திலேயும் இல்லையோ வுண்டோ வென்கிற சங்கை தோன்றிச் சிந்தை சிவங்கி யடிக்கத் தக்கது தான் இவ்விரண்டானும் பயனின்று. ஐயந்திரிபறக் கலைக ளோதிப் பொருணிச்சயம் பண்ணுவ தென்கிற வாசக ஞான மாகிய **அபரஞானம்** தோன்றிப் பாப ரகிதனாகி, சிவத்தை யறிவ தென்கிற அனுபவ ஞான மாகிய **பரஞானம்** திடப்பட்டவனுக்கே ஆநந்தமுண்டாம் அதனாலெனக.

நிகழ்த்திய நிரீச்சுர வாத அவிவேகத்தைக் குறித்து இங்கே கொஞ்சங் கண்டித்துக் காட்டுவ தென்னெனில்,

## நிரீச்சுரவாதகண்டனம்.

அனாதியான கடவு ளொருவ னுண்டெனும் ஆஸ்திகர்களி னின்றும் விசேஷ அறிவு படைத்த சுயக்ஞானிகள் யாங்களென்று பிதற்றிப் பூதியங்களைத் தானே அனாதி யென்னும் பூதவாதியோர்.—நாங்கள் கற்ற (Chemistry) கெமிஸ்டரீப் படிக்கேனும், வேறெந்தச் (Science) சயன்ஸ் படிக்கேனும், தங்கள் சுயக்ஞானப் படிக்கேனும் தக்க ஆலோசனை புரிந்து மண்ணாதி யைந்தையும் அம்மியில் வைத்தரைத்துருட்டியோ வேறெவ்விதமாகவோ இஞ்ஞான்று யாதொரு (வினை) சிருஷ்டியைச் செய்ய மாட்டுவா ராயின், அஞ்ஞான்றும் இன்னணம் யாராவதொரு மனிதனிருந்து யாவுஞ் செய்தகாரியம் அவன் ஏனையோர்போல் மரித்து விட்டா னென்றும் சத்தியமாய நிச்சயிக்கலாம்.

அஃதொழிந்து பூதியப் பிரவிருத்தியாய்த், தான் தானே யாவுமுண்டாயிற் றென்று பிதற்றுவது, குயவனன்றி யாக குடமென்றதிட்ட தொக்கும்.

அவர் நினைப்பின்படி பூதியங்களே சமஸ்தத்தையு முண்டுபண்ணு மாயின், எல்லா விதரசனையு முள்ள அறிவு அப் பூதியங்கட் கிருந்திருக்க வேண்டுமன்றோ?

அற்றேல், அதைக் கடவு ளென்றேனும் அவ ரொப்புக் கொள்ளா தொழிகததது மட்டற்ற மடமை யாமே.

அந்தப் பூதியங்க ளொன்றாய்ச் சேரவதுதான் அறி வெனறதிாக்கில், அவைகளைச் சேர்த்து வைத்தத அறிவு யாதோ?

அதுவும் * (நேசசா) இயல்டாமா?

இயல்பெனனிற் பூதங்களை யனுதி யெனபதென்னை? அது, பொயயாமே.

பூதங்களாற் சாவ சிருஷடியு முண்டாயிருக்கு மானால், அவை லயமாம டன்மை யுடைத்தா யிருப்பதென்னை? அனுதித தனமை செலலுமா?

பூதங்கள் நமமைப் போற் சொரூபலக்ஷண மற்று ஆகாயம், காற்று, தீ, நீா, மண்ணாயிருப்ப துண்மையா யின, பை, முட்டை, வியர்வை, நிலம் எனகிற சதுா யோனி தோற்றத்தையும் எதற்காக வுண்டாக்கின? கண்டு களிக்கவா? அப்படியாயின், பிரபஞ்சததுக்கு அவை இராஜாவாக விருநதாளவேண்டுமே? இது வுண் மையாமா? அநதோ! மயக்கம்.

யாதொரு பிந்துவி னிடத்தனறோ அறிவின் றோறற முண்டாகிறது. ஆயின, பிரதம பிந்து எஙகே யிருநது தோனறிற்று? அந்தப் பிந்துவா யாமுண்கினற பஞ்ச பூதியங்கட் கறிவிருந்த தெனப தெங்ஙனம்? அது எப் படி யொரு பிநதுவைக் கறபிக்கும்?

இயல்பில் அறிவுளள தெனபதாயின், மேலே கடாவிய கடாககளுக் கெல்லாம் விடையென்னை? விடை தடை யன்றோ?

---

* அந்த நேச்சர்தான் அநாதி நிதயம் அதுவே சிவட்

பூதியங்க ளைந்துடன் சூரியன் சந்திரன் உயி ரென்கிற மூன்றுஞ் சேர எட்டாகும். இவ்வெட்டையும், அகண்டிதமான சிவனுக்கு அஷ்டமூர்த்த மென்று சிவாகமங்கள் செப்புமாயின், தெய்வ மில்லையென்று நாஸ்திகர் கூறுங் கூற்று இஞ்ஞான் றெப்படிச் செல்லும்? அது நாஸ்திகமே யாகும்.

தோற்றப்பட்ட எந்த வஸ்துவையும் பிரித்துப் பிரித்து நசித்து நசித்து எவர் பார்க்கினும், அக்கினியி லிட்ட வஸ்துவி னுற்றம அன்னியப் பட்டதனைய ஒன்று விசேடித்து நிற்பதே யுறுதி. ஆயின், அது முக்காலத்து மழியாத சத்தென்று விவேகிக ளறிவாரேல், ஸ்தூல படிவ மொழியினும அதனுழி சத்தாயிருந்த ஆத்மா வென்ப தொன்றுண் டென்று மறிவார்.

அந்தரப் பிரவேச வ்விந்து சூட்சும ஸ்வரூபப் பைசாசங்களும, இதற்குப் பிரமாணிக மாகும்.

பைசாசங்களின் பன்மையையே யறியா நாஸ்திகர்.—பரமார்த்திக பராபரத்தின் றன்மையை யெப்படி யறிவார்? அது நாஸ்திகமே.

புலால் விழிக்குப் புலப்படா எத்தையும் நாம் நம்பமாட்டோ மென்னு நாஸ்திகர்.—இரும்பைக் காந்த மிழுக்கும்போதும், அது பற்றி யிழுக்க நாம் பார்த்ததில்லையே, அது எப்படியோ கூடிற்றென்று, அறி வழிந்து கூற வேண்டியவராக டானே. நம்புவா ராயின், கொண்ட நாஸ்திகத்திற்கு ஹானி வருமே?

திருசியத்துவத்திறந்த தோற்றுச் சூட்சும காரியங்கள் தெய்வாதீனமா யுண்டென்றற்கு மந்தர சித்திகளும், மெய்யடியார்களிட முண்டாகிற நா[illegible]டப்பிரகார அற்புத சித்திகளுமே போந்த வுதாகரணம்.

நாஸ்திகர் தெய்வ மில்லையென்று வித்ற்ற நாப படைப் பாராயின், அவர் பயிலு மொழிகளைத், தானதானே பிர-

சவ அறைக்கு ளிருந்து கற்றுக் கொள்ளாமல் உரைப்பா ருரைகண்டு பின்னர் விதண்டை படிப்பதும், யாங்கள் சுயக்ஞானிக ளென்பதும் என்ன கீணம்?

உரைபா ருரையே,—பெவாக்கும பாரம்பரியமாய் நிகழுவதை அவரொத்துக் கொள்வாராயின், அதற்குப் பூர்வாசாரிய ரொருவர் இருந்திருப்பா ரென்றும் ஒத் துக் கொள்ள வேண்டியதன்றே. அப பூர்வாசாரியரால் முடிவு செய்யபபட்டிருக்கிற காத்தத்துவ நிச்சயத்தை; அவர் தநத மொழியை யன்றித தம்மா லொரு மொழி யுங் குயிற்றச் சக்தியறற காததத பூரோகிகளாகிய நாஸ் திகா மறுப்பதானது.— அண்டததை அணு விழுங்க முயனற தொக்கும்.

அநதகார கிரகதது ளகப்பட்ட பொருளினைப புன் புலாற் கண்ணுடைய வொருவன, விழிதது விழிதது வீக்ஷணித்தும காண்பதில்லை. அப்படிக காணாததால், அங்கு யாதொரு பொருளுமில்லையெனறு அவ னுரைப் பதுபோல் ஆணவ மல ஆவரணததால் மூடுண்ட சிற்றறி வையுடைய நாஸதிகா எவ்வகைததாயக கடவுளைக் காண ஆள்வினை புரியினும, தமக அறிவினு லாவது, புலால் விழியினுலாவது காணா விகசித போதமாகிய ஞானதிருஷ்டி யுடையாரே காண்பா.

ஜடவிழி ஜடததையும், சூட்சுமவிழி சூட்சும பதார் ததையு நோககத தகுதியுடைத் தெனு முறை மறந்து, முக ததிலுள்ள ஊனக கணணையன்றி, அகததிலுள்ள ஞா னக கணை இனறெனறு கலமணிடந்து "கணடதேகாக்ஷி, கொணடதே கோளகை" எனறு கதையளக்கும் அனீச்சுர வாதியா துயிலுங்காற், 'கருக் கண்ட கண், எது வென்று தீாடபாரோ வறிவோம்.

இநநிச்சயம விளஙகற் பாலதாய இந்நூலின பீடிகை யினும், நூலாரமபத்திலும் உதாகாரிததுக காட்டி யிருக் கினறனம். சிறக,

பிரத்தியக்ஷத்தைமட்டு நம்புவோமென்னு நாஸ்திகர்.— தன்னை யீன்றாளின்னாளென்று எவ்வாறுணர்ந்தார்? அக்காற் கண்டவர் சொற்படி அதை யுணர்ந்தோமென்பாராயின், கடவுளைக் கண்டவர் சாற்றிப் பொறித்த சாஸ்திரப்படி கடவுளுண்டென்பதையும் அன்றோ ருணராது போக மூளை ஒறகமா? தன்னை யீன்றாளைத் தாமறியாவிடினும் பிறர் மகவீனுவதை நாம் காண்டலால் அது பிரத்தியக்ஷ ருஜு வென்பாரேல், கடவுள் ஜகசிருஷ்டி செய்ததை நாம் காணாவிடினும் குடத்தைப் பண்ணுவது குலாலனென்று நாம் பார்த்தபடி அதுவும் பிரத்தியக்ஷ ருஜுவென றறியா துளறுவது அவிவேகமாமே.

கடவு ளிருந்தால் அவர் அப்போதைக்கப்போது எல்லாரையும் ஏன் அடக்கியாள்விலலையென்று நிரீச்சுரவாதிகள் கடாவுவார்கள், அவரருளில்லாமல் எவன் காலனை வென்றுயிருந்தானென்று அவரொட்டுவிப்பார்? ஆனால், பஞ்ச பூதங்களின் செயல் மாறுபடுதலின்மை அதற்கொருவன் காலம் கரணத்திற் குடப்படத் தருமென்னிலோ, பிரகிருதி மாயையும் கடவுளதிகாரத்திற் குள்ளாய் நின்று தன் றொழிலை யியற்றுவதியல்பென்பதையும் அனேகரொத்துக் கொள்ளார் தொர்வதென்னை நமு? அன்றியும், ஒருவன் றமைசெய்த காலம் ஒரு வித்தை விதைத்த காலமாகவும், அதை யனுபவிக்குங் காலம் அது முதிர்ந்து காய்த்துப் பழுக்கும் போது பலனுக்கு வருங் காலமாகவும் அறியத்தக்கது. இதுவே செயலுக்கின் பொதுவான இயல்பு நியாயம்.

ஜீவான்மாக்கள் முன்னிழைத்த கன்மத்துக் கேற்ப இம்மைக்கு இடமெடுத்த துர்—விதத்து அனுபவிக்குமா சுபாசுபங்களையும் மறுமையில் பெறுஞ் சுவர்க்க நிரயங்களையும் புனர் ஜென்ம விருத்தாந்தத்தையும் ஒவ்வொரு ஜீவான்மாவுக்கும இட்டமாய வெளியிட்டு நிகழ் காட அனுபவத்தால்

மற்ற விரண்டு கால் விவரணத்தையும் முக முகமாய் ருஜுச் செய்து கரதலாமலகம் போலக் காட்டக் கூடிய ஸ்ரீ நந்திகேஸ்வரருடைய உலோகக்கிழி நூலும் கமல மாமுனிவருடைய இரேகை சாஸ்திரமும் எவ்வளவோ காலத்திற்கு முன்னர் குணிக்கப் பட்டு இக்கா லிந்தக் கருப்பத்தி னிகழ்வதை யெவ்வரு மறுக்கார். அவ்வாறு ஜீவான்மாக்கள் ஜெனன மரணப்படுகிறது நியாய முன்னர் டானும் அந்த நியாயத் தீர்ப்புக்கு ஒரு கர்த்தா விருந்து கொண்டிருப்பதுஞ் சத்தியமன்றே. நிற்க,

மாயை யிலதேல் மதங்களும், சிவ மிலதேல் அறிவு மிலையென்று ஆதாரண மின்றி யறியலாம்.

## பாபந்தீன்றன்மையும், பரிகார வியல்பும்

ஒருவனுடைய ஜீவன் அதரிசனமா யிருப்பதுபோல, ஆறறும் பாப புண்ணியமும் அதற்குரிய பலனளிக்கும் தெய்வமும் அதரிசனமா யிருந்து கொண்டிருக்கின்றன.

இதனால் பாபத்தையுந் தெய்வத்தையும் மனிதர் காணா மல் நடக்கலானார். மேலெழுதித் தெய்வ முண்டென கிற நிச்சயம் ஒருவனுக் குண்டாம்பக்ஷம், அவன் ஒருகா லும் இரகசியமான எவ்வித பாபங்களையு மியற்றான். பிரத்தியக்ஷானுபவமாயுள்ள அரச னாணைக்கு அஞ்சி நடப்ப துழ்ந்து நடப்பான.

ஒருவன் பாபஞ் செய்து மேன்மையாய் உயிர் வாழ்வதி னும், கீழ்க்குலத்தாருக்கு ஊழியஞ் செய்துண்ணல் மிக நன்று.

பரகதி யென்ற சுகத்தை நல்கும் அருளென்ற பரமௌ ஷதத்திற்குப் பாபமென்ற பதார்த்தம் பதிய முறிவா கும்.

ஆத்மார்த்தம் பரார்த்தமா யுதவுஞ் சத்காமங்களைக் கடவுளுடைவித்துக் களிக்க வேறில்லை. அக்கினியை

யடுத்தாற் குளிரை வற்றிதஞ் செய்து கொள்வ தற்று, இவனது தோஷத்தை யொழிக்கற்கு அவை பிராயச்சித்த வழித்தாகும்.

## கடவுளைத் தரிசிக்கற்கான முறைமை முதலியன.

கடவுளைத் தரிசித்தல் தன்னைத் தரிசித்தா லன்றிக் கூடாத விஷயமாகும். அது முத்துச் சிப்பியின் மாமிசத்தை விசாரக்கருஞ் செய்யுந் தூணி செய்யு நித்திலத்தைக் கண்டு பிடிப்பது போல ஞானத்தால் தத்துவங்களை நியதி களைந்து காணத்தக்கது. அந்த ஞானம் எவ்விதம் விருத்தி யாகுமெனில், மேலுரைத்த ஒழுக்கங்களிலும் பின் பேசப்படுங் கடமைகளிலுந் தவறாது நின்று நிஷ்காம மாக அதாவது.— ஈஸ்வரப் பிரீதியா யிழைக்குஞ் சத்கா மங்கள் சித்த சுத்தியையும், விசாரணை ஞானத்தையு நல் கும். மறுமைப்பலனை யுத்தேசித்துக் காமமாக வியற்றுஞ் சத்காமங்கள் அவைகளை யனுபவிக்கப் பிறவியையே நல் கும்.

இவ்விரு வகையுங் கிரியை சரியை யோக மென்ற வனை யிற் பொருந்தும். ஞானத்திற் பொருந்தா. ஏனெனில், மேன் மூன்றும் முறையே பூ, பிஞ்சு, காயாகும். ஞானம் பழமாகும். அதுவே **சர்வ க்ரியா சூன்யாநந்த மோ க்ஷானுபவமாகும்.**

இவ்வனுபவ முதிக்கற்கு மேல்வினைவாறு விசாரணை வேண்டும். அவ்விசாரணையிருந்தால் ஆவரணத்தானை மறை பட்டுள்ள தன்னியல்பறியும் தன்னுடைமை யுணர்தி, காம யோக முதலியவா லறியப்படுவதில்லை. வேதம் படித் தாலுமில்லை. ஏனெனில், வேதத்தால் நடமாடிய பேனா ஓடியும் பாடியும் ஆடியு மறிய முடிவதில்லை. ஆராய்வானை முடிவதா மென்றெண்ணற் பாற்று.

சேம்பின் கனிமையைப் போசக் கூடியது காமத்தா லாகும். கண்ணுருடியிலிப்படா யுண்டான களங்கத்தைக்

காண்கக் கண்ணே போதும். அதுபோற் சில பாபங்களை உயா காமங்களாற் போக்கலாம். ஆன்மாவை யறிய அதன் ஞானமே போதும் எனவு மோாக.

ஆனால் பாப விநாச நிமித்தமேனும் ஞானிக்குச் சற்காமம் வேண்டாவோ வெனனின், * பிராலப்தந் தவிர ஆகாமிய சஞ்சித மென்ற விரண்டும் ஞானியைப் பற்றா தொழிவதாலும் பிராலப்தமாகிய கறங்கு சுழலுங்கால் அதன கால் போல் தானசையாமற் சலன மற்றிருப்பதாலும் அது வேண்டியதின்று.

ஞானியானவன் அத்தன்மை பெறுமுன் ஆற்றிய புண்ணிய காமங்களைத் தன்னை விசுவாசித்தவாக ளிடத்திலும், பாபகாமங்களைத் தன்னை நிந்தித்தவாகளிடத்திலும் தெய்வச் சித்தப்படி யிறங்கவிட்டுப் பாபபுண்ணிய காம ரகிதனாய்ப் பிரகாசிக்கத் தக்கவனாவான். ஞானிக்கு, அக்காம மிரண்டுங் கூடாத காரியமன்றே.

ஞானி செய்கிற யாதொரு சற்காமமுந் தனக்கில்லை. ஏனெனில், ஜீவாகட்காக ஈஸ்வர னுதவாநின்ற புண்ணிய காமப் பலன்கள் அவ்வீஸ்வரனுக கில்லாதது போன்று.

வேதத்தி னுடைய கிரியா காண்டத்தில் வாணாச்சிரம தாமப்படி யாற்றா நிற்கும் யாகாதி சற்காமங்க ளாகிய தபமே சுகமென்று சாற்றியது முண்டு. அஃது — மண்டின்ற குழந்தையின் அழுகைக்கு நல்ல அவுஷதங்களை யூட்டு நிமித்தம் அவ்வவதாரம் தித்திப்பான பண்டங்களை முதலிற் காட்டி யழைத்த லன்னவாம். இஃது லௌகிக விச்சையுளார் பற்றற்ற துரிய ஞானத்தைப் பொருந்தா ரென்பதை யுத்தேசித்து நித்யமற்ற ஊர்த்த லோக போகங்களையேனு மெய்துக வென்ற கருணை குறித்து விதித்ததாகும். இது பூர்வ பக்ஷமன்றி, உத்தர பக்ஷ மன்று. அலாமல்;

* பிராலப்த மென்பது பிராரத்துவம்.

வைத்து மறந்து விட்ட பொருளை ஞாபகத்தாற் கண்டு பிடிப்பதன்றி காமத்தாற் காண்பதில்லை. அதுபோல் மறதியான அஞ்ஞானம் அந்தர் முகமாகிய ஆத்ம விசாரத்தால் நசித்து ஞ்ஞான மாகிய பூர்வ ஞாபகந் தோன்றி மாயா தத்துவ பந்திப்பிற கிடக்கும் பிரம்ம வஸ்துவைத் தரிசிப்ப தன்றி, கிரியானுஷ்டானங்களாற் கூடாது. ஆனால் மனத்தின் கண் விருத்தியாகிற ஞானமுங் காம காரியந் தானே யென்று இங்கே யோராசங்கை நிகழும்.—அஃதல் வண மன்றென்று இவண் நிரூபிப்போம். புருஷ தந்தர மாகிய தேற்று விளையி னுண்டபானது வஸ்து தந்தரத் தாற சேற்றை நீரினின்றும் பிரித்துத் தெளிவித்து அச் சேற்றொடுதானுந் தாழ்ந்து வியமாவதன்ன அத்தை யென்னுக. இவ்வித வஸ்து தந்தரம், ஏனைய காமங்களிடமில் லாமல ஜெனித்தே கிடக்கும். அதனுல் பை முதலிய நாலு யோனி தேவா மக்கள் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ் வன ஸ்தாபர மென்ற எழு வகைத் தோற்றம் எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவ பேதங்களிலும் பிறந்திறந்து கொண்டே யுழல்வதாகும். அன்னணம் பிரதம உலக சிருஷ்டிமுதல் இதுகாறு முடிவில்லாதலையும் அநந்த ஜீவாத்துமாக்கள் கடைத்தேறுவ தற்கு இந்நூலிற் சொல் லப்படுகிற வஸ்துஞானமே வேண்டும்.

இந்த வஸ்துஞானமும், அதை விருத்தி செய்யக் கூடிய நிஷ்காம பக்தி விசுவாச ஈஸ்வராராதனையுமே எல்லா ஜீவனுக்கும் பொதுவாகும், ஏனைய யக்யாதி காமங் களை விடுத்து வயோதத்தும் வருணாசிரமத்தை யனுசரித் தது மாம; அன்றி, திருமுறையாகிய தேவார முதலிய பாராயணம் பண்ணல், சிவ சரிதங்களைச் சிரவணஞ் செய் தல், சாந்திராயண கிருச்சிர முதலிய விரதங்களை யனுஷ் டித்தல், ஹோமாதிகளை புரிதல், தெய்வப் பிரீதியான பாவி னங்கள் பாடி மாலையாகச் சாத்தல், மந்திரங்கள் ஜெபித் தல், கோதான முதலிய செய்தல், தீர்த்தங்களாடல்,

எக்காலும் வாய்மைபேசல், சிவதொண்டுசெய்தல், தொண்டா தொண்டு செய்தல், பிராண பந்தன ஹடையோக மியற்றல் என்ற பலவித நிஷ்காம காமங்கள் முக்திக்குரிய சாதனங்களா யிருப்பதில், சிவ பூஜையின்றும் தொண்டா பூஜை அதாவது.— அடியார்க் காற்றுந் தொண்டு ஜேஷ்ட மானதுபோல குருகடாக்ஷப் பிர்ம்மக்ஞானோப தேசத்தால் ஆத்மாவாகிய தன்னை யறிகிறதே வீடடைதற்கு விசேஷமாகும். ஆத்மக்ஞான சொரூபிகளா யுள்ள அடியாரக் காக்குந் தொண்டால் இல்லறத்தாரகளும், துறவறததாரகளுந் கதி பெறலாம்.

பிராமாணியம்

திருவிடைமருதூரச் சிவாலயததுழி தங்கியிருந்த திருவெண்காட்டடிகளாகிய பட்டினத்தா ருடையவும் அவருடைய சிஷியா பத்ரகிரி யரசருடையவும் உசிட்டப பிரசாதத்தை யுண்டுண்டு உயிா வாழ்ந்ததும் ஒருநாள அவவரசருடைய கைப்பாத்திரத்தைக் கீழே யெறிந்து வுடைதத போழ்து அது தாக்குண்டு மரிதது விட்டதுமான ஓா பெட்டை நாயின் ஜீவனானது காசி ராஜனுக்கு அழகிய புததிரியாய்ப் பிறந்து வளாந்திருக்கையில், அவளது பருவங் கண்டு அரையன் மணமகன் விசாரிதத போாந்த அப்பெண் கொடி திருவிடைமருதூா ஆலயததின மேலை வாயிலில் நிஷடை கூடி யிருபபவா எனக்கு நாயகருவாா அவரிடந் தன்னை யனுப்பிககுகவென்று கேட்டுககொணட பிரகாரம் செய்விதத் அவ் வரையன முதலியோா கன் காண பத்ரகிரி யடிகள. அப்பெண்ணின்று பூாவ வாதத மான முதலிய வெல்லாம அவள வாய மூலங் கேட்டு பின்னா அவள் கோருதற்படி முக்தி யருள வென்று கையைப் பிடித்த வண்ணம் கீழை வாயிலி லிருந்த தமது குரு நாதரிடஞ் சென்று "சுவாமிகள உச்சிட்டப் பிரசாத முண்ட நாய்க்கும் மறுஜென்ம முண்டோ" என்றுரைத ததின்மேல், "அது சிவ சம்மதம யாமென் செய்யலாம"

என்றருளித்துத் திருவுளத்தை நோக்கியவுடனே அங்கே பரஞ்ஜோதி தோன்றிட் டடங்கத்து. அதற்குள் அவ்விருவரையும் போம்படி யருளிய வாறு சென்று பிறவாத சாயுஜ்ய முக்தியைப் பெற்றார்கள். அறிக.

மேற்பணித்த நிச்சயத்திலுண்டாகிற ஆத்ம விவேகப் பலனானது.—விபசாயிக்கு முதலிற் றுன்பமும் பின்பு இன்பமும் உண்டாதல்போல பிரமாணநீதமா யிருக்கும். அநித்தியத்தி லுண்டாகிற பலனோ வியபிசாரி யனுபவம்போல முதலி லின்பமும் பின்பு துன்பமுமா யிருக்கும். ஆதலால்;

ஞான பக்குவி யானவன் எக்காலத்தும் முன்னஞ் சொன்ன காமாதி சித்தவிருத்திகள் பதினைந்தையு மகற்றி யிருப்பது மன்றி அடியிற் கூறுங் கற்பனைகள் பதினைந் தையுங் கைக்கொண்டு அவைகளிற் சுட்டிய தீமைகளை யெவ்வாற்றானுஞ் செய்யாமலும் செய்விக்காமலுஞ் செய்ய வுடன்படாமலும் நீங்கி யிருக்கவேண்டும்.

## கற்பனைகளின் விவரம்.

(க) பொய் புகலாமை.
(உ) கள்ளம் செய்யாமை.
(ங) லாகிரி உண்ணாமை.
(ச) கொலை பண்ணாமை.
(ரு) குருநிந்தை செய்யாமை.

} இவ்வைந்து மாபாதகமு மற்றவரோ செய்வார், ஏனையோர் அஞ்சுவார்.

(சா) துஷ்ட சகவாசம் ஒழிதல்.
(எ) சாது சங்க சகவாசம் விரும்பல்.
(அ) வீண் கதைகளைப் படியா தொழிதல்.
(கூ) பலவித சாஸ்திரத் திரிபுகளைக் கண்டு மயங் காதிருத்தல்.
(க0) எல்லாரிடத்தும் அன்பாகப் பேசல்.
(கக) எவ்வளவு அழகுள்ள ஸ்திரீயே யாயினும் தா யைப்போ லெண்ணல்.

(௧௨) எல்லா மனிதரையும் சகோதரரைப் போற் பாவித்தல்.

(௧௩) எல்லா நள்ளூத்தினு மிருக்கக் கீழ்ப்படிந்து நடத்தல்.

(௧௪) குருவை விசுவாசித்தல்.

(௧௫) கடவுளை நேசித்தல்.

இவற்றுள், ௪ - வது கொலை பண்ணாமை யென்பது:— சிவ சிருஷ்டியிலுள்ள யாவத் ஜீவ ராசிகளையும் வதைக் கொணா தென்றும். காரணம். தன்னைப்போ லறியு மறிவு அவைகள்பால் எவ்வளவு முள்ளதேனும் அது ஆத்ம சொரூப லக்ஷணம் என்பதா லென்றாக. ஆத்மாக்களுக்குத் துன்பந்தருவதால் சமஸ்த ஆத்மாக்களிலும் அந்தர்யாமியா யுள்ள ஈஸ்வரனுடைய அருள் வாராதொழிவதுமன்றி ஆத்மஞானமுங் கிட்டா. நரகமுஞ் சம்பவிக்கும். பசுக்களாகிய உயிர்கட்கெல்லாம் ஈஸ்வரன் பதி. அதனால் அவருக்குப் 'பசுபதி' எனும் பெயரேற்பட்டது. அதனொருட்டு உயிர்த்துரோகங் கட்டாயங் கூடாதென்றும், சொற்ற (௧) ஜீவகாருண்யம் (௨) ஈஸ்வர பக்தி (௩) பாசவைராக்யம் (௪) பிரம்மஞானம் என்னும் நான்கு முற்றவரே மோக்ஷவீடடைவா ரென்று மறிக.

காலத்திரயத்தும் கெடாத வஸ்தாகிய சத்தென்றும், அதன் ஞானமாகிய சித்தென்றும், அதன் சந்தோஷமாகிய ஆநந்தமென்றும் பகரக் கூடிய சச்சிதாநந்த ஸ்வரூபமாயுள்ளதே சமஸ்த ஜீவாத்மாக்களும். அந்த மூன்றும் முறையே தோன்றி முறையே யடங்குந் தன்மையுடைத்து. அதற்கு மாறாய் இடையிலொரு துன்பத்தை யாதொரு ஜீவனுண்டாக்குவது துன்பப்பெருக்கே.

இன்னும், கூறிய சச்சிதாநந்த ஸ்வரூபத்தை யுடை ஒரு ஜீவனை யதார்த்தத்தி லெப்படி யிருக்கிற

3153



தென்றல், புகைகளை முதலியவுள்ள ஒரு பிரம்மவிருக்ஷமாயிருக்கிறது. அதின் அடிமரமானது சர்வசிருஷ்டியின் ஆத்மாக்களாகவு மிருக்கிறது. பெரிய கொப்புகள் பிருதிவி அப்பு வாயு தேயு ஆகாய மெனகிற பஞ்சபூதங்களாகவும், சிறியகொப்புகள் இந்திரியமுதலிய தாகவும், தளிர்கள் அந்தாக்கரணம் திரிகுணம் திரிமலங்களாகவும், புஷ்பங்கள் பிந்துநாதமாகவும், கனிகள் தத்பராத்மம் பராதமமாகவும், விதை பராத் பராதமமாகவும் இருநூற்புலம் வெளியாகுஞ் சம்வேதக்ஞானப்படி யிருந்துகொண்டிருக்கின்றன. இதனால், ஜீவாத்மாக்களை யுபாதித்தல் சாலவுங் கேடாய் முடியும். மாம்ச முண்ணறகேனுங் கொல்லுதல் உயிர்க்கொலைதான். இந்நியாயம அறிவுள்ள வாத்மா அறியும். அறிவற்றவாதமா அறியார். ஆம் உதாகரணம் ;

**பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம் ருஉ-ருங-**
**ருச-ருரு-வது தூக்குகள்.**

"கங்கையிற் படிந்திட் டாலுங்
கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம்
வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில் லாத ஞான
சாத்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால புசிப்போன்
போய்நர கடை வனென்றே."

"கலையெலா முணர்ந்தா னேனுங்
கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனும்
மனமய லகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்
குதவிய கைய னேனும்

இலகிய விரக்க மின்றே
லெழுமர கடைவ னன்றே

"கொலையிலா னுதவு மன்னங்
கூறிற்பே ரமுத மாகும்
கொலையினா னளிக்கு மன்னங்
கூறிலவல விடம தாகும்
கொலையின னளிக்கு மன்னங்
கொடும்பவ மளிக்கு மூலம்
கொலைஞர்தம் மனையி லுண்பான்
கொலைஞனே யாவ னன்றே."

"இத்திற னருள்கைப் பற்றி
யுயிர்க்கெலா மிதத்தைச் செய்கச்
சத்திய மிரகக மின்றேன்
முத்தியைச் சார்கி லார்சற்
*புத்தியால் யோகஞ் சாரும்
யோகத்தாற் பரம ஞானம்
சித்தியா மிதற்கா தாரஞ்
சீவகா ருண்ய மன்றே".

இன்னமும் இதுபற்றிச் சிவஞானதேசிகம் ௨௧-வது வியாசத்திற் றெளிக. நிற்க,

இதுவரை நுவன்றதில் கிரியை சரியை யோகம் ஞான மென்றும், பிருதிவி அப்பு வாயு தேயு ஆகாய மென்றுஞ் சொற்றதற்கு மாறாய, சரியை கிரியை யோகம் ஞான மென்றும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்றும் நூல்க ணுவலும். அவற்றுள் மனத்தின் அசைவு முதல் எவ்விஷயங்களுங் கிரியையா யிருப்பதால் முதலிற் கிரியையை வைப்பது நியாய மாயிற்று. இதுபற்றித் திவே-தய சடாக்ஷரோபதேசமென்னுரு சிவஞானதேசிகம்

* பத்தியென்பது ஊருமூன்றென்கிற குரு, லிங்கம், சங்கமம் என்பனவற்றின் மேல்வைக்கும் விசுவாசம்

௩-வது வியாசத்தின் ௫௩-வது கேள்வி யுத்தரத்திலும் விளக்கி யிருக்கிறது. ஆகாயத்தைப்போல தேயுவான அக்கினி எங்கணு நிறைந்திருக்கிறதாலும், வாயு அப்படிக் கின்றிச் சில விடங்களிற் சூன்யமாயிருக்கிறதாலும் ஆகாயத்திற் கடுத்த பூதந் தேயுவென்றும் அதிலிருந்து வாயு தோன்றிய தென்று முடிபாம். ஜலம் மரம் கல் இவைகளுக்குள்ளும் அக்கினியுண்டு. அதுபோல் வாயு விருப்பு பதில்லை. ஆனல், வாயுவுக்கு உருவமில்லையென்றும், தேயுவுக்கு உருவமுண்டென்றுஞ் சிலா செப்பி யயாத்துவர். சீதோஷ்ணத்தால் வாயுவின் அசைவாகிய காற்றடிக்கப் ப்ரிச முண்டாவதனைய தேயுவு மொன்றிற்ருக்க உருவமுண்டாகும் யதாாத்தத்தில் வெப்பமட்டுமே யதற்குண்டு. இந்தப பூதியட் புரட்டு வியாசரால் விளங்கதாக ஸ்ரீநந்திகேஸ்வரா வெளியிடுகிறா. வியாசராககிய நூல்கள் அனுஷ்டானத்தி லிருந்துகொண டிருப்பதால் அவ்வணமே மேலிரண்டு வகையையுஞ் சிவஞானதேசிகத்திலும் வைத்துக் கூறபபட்டுளளன. உண்மை யுணாக.

மேலேசொனன கற்பனைகளை யொருத்தன் கைக்கொண்டு பரிபாகப படுவது நல்ல காளைப் பருவமே யாயின உததம மாகும். அதின மேற்பட்டது மததிம மாகும் அதின்மேற்பட்டது அதம மாகும். ஏனெனில்; பாபகாமங்கள மேன்மேலும் அறியாமைபறறி வளாவதாலும், நரை திரை சோம்பு பெருகிகொண்டு வருவதாலுமாம். சிலா, மூப்புததன்மை வந்ததின பேரிறருன் ஞானசிரியனை யடுககவேண்டுமெனறு ஆசையான் மொழிவர். அவருககு உடம்பிலுண்டான நரை திரையைப்போல காமாதி சித்தவிருததிகள் நரை திரை கொண்டிருப்பதில்லை. அதருல் அது நியாயமன்று.

மேல் வழுததிய காரணம்பற்றி ஜீவன பல்வித பாவங்களாற் பீடிக்கப்பட்டுச் சிததசுததி யில்லாதுழலத தகு

வதுமன்றி மரணம் இன்ன நேரமென்றில்லாதிருக்குந் தன்மை கணித்துமாம். ஜாதக கணிதமூலம ஆயுளைத் திட்டமாய்த்தெரிந்து கொள்ளவெனினும் மததியில் அப மிருத்யு எய்தினு மெய்தும். இதற்கு விளக்கம்பாலதாய்;

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

"இன்றுநன்று நாளைநன்று வென்றுநின்ற விச்சையாற், பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டுப் போதுமின், மின்றயங்கு சோதியான் வெணமதி விரிபுனற், கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே."

ஆதலெட்டு சாவகாசங் கோருவதெல்லாம் பிராந்தியே யல்லால் விஸ்ராந்தி யாவதில்லை. நல்ல விவேகமுதித்த வன்றே மூப்புந்தனமை தோன்றி விட்டதெனச் சிந்தித்து முக்திக் குபாயந் தேடவேண்டியது அறிஞா கடனமயன்றே.

, ஒருவன கல்வியைக் கற்றதனால் நூலின் பயனை வாயாற பறையலாமேயனறி அநுபவிக்க முடியாது. நெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதறகுத் தக."

என்றுசொன்னபடி, ஒல்லேயி லநுபவததிற்குக் கொண்டு வருபவனே பாலுணரியாவான. அவனே அறிஞன.

கிரியை சரியை யோகம் வரையிலுண்டான சித்திக ளெல்லாம் ஒருவனுடைய புதுமணகோல டம்பம் போலவும், ஞானம் அம மணமகனும அம மணமகளும விவாகோதசவ சங்கததையுஞ் சடங்குகளையும் விட்டகன்று தனித்த கிரகததில இரகசியமாய்ச் சென்று இரகசியமா யிருந்து இரகசியமான விஷயத்தை அபிமான அச்ச மேது மின்றி இரகசியமா யநுபவிதது ஆநந்திப்பதுபோலவு மிருநது கொண்டிருக்கிறது. இன்னண விஷயம் ஜீவாத்

மா பரமாத்மா [illegible] விக்கும் [illegible] தால் அஃதித்தகைமை யுள்ள [illegible] அனுபவிக்[illegible] மாவுக்கு வெளியாமேயன்றி இதரனுஞ் செவ[illegible] யிடச் [illegible]டா, அஃது அநிர்வசனீயம்.

பிராண பந்தம் அடையோக சித்தியாலு[illegible] பக்தியாலும் [illegible]தசித்திக ளுண்டாம். அ[illegible] ஞானிக்கு வேண்டு மெனபதின்று. ஆனால், [illegible] பாசனுபவத்தோடு கூடிய பிரம்மஞானி [illegible] களை ஜீவர்கள் பொருட்டா யாறறலாம். திரு[illegible] நாயனார்

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும மற்று
நிலையாமை காணப் படும்."

என்று சொனன படி, முத்திக்குச் சித்தி வே[illegible]மென்ப தின்று. பற்றறுததலே வேண்டும். புவனபோக சரீர [illegible] ஞ்சையாகிய வெளிப்பற்றும்; அநதாக்கரண [illegible] தத்துவ வாஞ்சையாகிய உட்பற்றும் மறு பது சமுசார பந்தமற்[illegible] துறவு மார்க்கத்திலேயே அதிகமுங கூடும.

[illegible] ற வு.

துறவு மார்க்க ஞானம் பொன்னிற் பதித்த இரத் தினம் போலாம், இல்லறததுறற ஞானம இரும்பிற் பதித்த இரத்தினம் போலாம். ஒரு ஜீவனுக்குத் துறவா னது மறுஜன்மமாய எண்ணடபடுகிறதென்று மாதவா சாரி யென்னும் [illegible] ஸ்ரீதேவியார் சொல்லதை சரு திப் பிரமாணமாகும், ஏனெனில், தானனுபவிக்கவென்று தேடிய இருவகைபபற்றுன தனு [illegible] புவன போகம் [illegible]றுதது வேறு சீரமைப் [illegible]தாலாம். அலாமல், [illegible]லாமேனும் [illegible] ஒன்றாயே காமிக். இல்லா [illegible] ஹிருதயம் [illegible] [illegible]லையமாகா. இத [illegible] மனமே [illegible]

இந்நான்முறைவை; முதன் முறையாக வெளிப்பற்றாகிய உயிர்ச்சார்பு பொருட்களை யென்னும் உலகக் வகையையு மொழித்துப் புறந்துறவாகவும், அதற்குமேல் அதன் கண்வைத்த அவாவினைத் தழைக்காதறுத்து இரண்டா முறையாக இந்திரிய நிக்கிரகம்பண்ணி பின்னர் முன்ன மேறியிருந்த கரண வாதனையையெழாமல் நசித்து உட்டுற வாகவும் கொள்ளவேண்டும். அதற்குமேல் நனவிற் சுழுத்தியைப் பெற்று, அதற்குமேல் அஞ்ஞான நிவிர்த்தி பண்ணி, அதற்குமேல் ஜீவதரிசனம் பண்ணி, அதற்கு மேற் பரதரிசனம் பண்ணி, அதற்குமேல் சிவதரிசனம் பண்ணி, அதற்குமேல் துவைதமான ஜீவ வியல் கெட்டுச், சிவ வியலாகிய அத்வைத ஐக்கியங் கூடவேண்டும். அவற்றினுள் வருகிற விவரணத்துடன் அவ்வனுசந்தான வியல்பு கணித்துப் பின்னே விவகரிப்பாம்.

இம்மேலே வகுத்திய வெளிப்பற்றிலுற்ற மனைவி மகார வாஞ்சையைப் புறப்பற்றென்றும், சரீரவாஞ்சையை இடைப்பற்றென்றும் இருவகையாய்ச் சிலர் சொல்லுவர். அப்படியாயின், பற்று மூவகையாம்.

உட்பற்றொழிந்தோரிற் சிலர்பால் புறப் பற்றிருப்பதாகவும் காணும் அஃது — வேரறுந்த கொடி சிறிது போது பச்சென்றிருத்தல் போன்றும். இங்ஙனம் அகப் பற்றாகிய வேரை முதலிலகழ்ந்துவிட்டாற் புறமாகும் புறப் பற்றாகிய கொடி தானேயுலர்ந்துபோமே யென்றாகிக் கவரும். அது முறைமையன்று. ஏனெனில்; முட்களுடைய செடியை கொடியை முதலிலகளைந்து பின்னர் வேரைக்களை டகழ்தல்போல புறப்பற்றையே முதலிலறுக்க வேண்டும். இவ்விதமே திருவள்ளுவர் திருமூலர் திருவெண்காட்டடிகள் சாந்தலிங்கஸ்வாமிகள் ஸ்ரீ குமரதேவர் தாயுமானவர் முதலியோர் சம்மதமும். ஆனால் காமம் வெகுளி மயக்கம் என்னு முக்குற்றங்களான முட்களி

லலா ஞானஜனகன் முதலியோர் புறப்பற்றாகிய தளைகளைக் களையாமல வகிர்ந்துகொண்டு உட்பற்றாகிய வேரை யகழ்ந்ததுமுண்டு. இது பொதுவிதியன்று. காரணம். முக்குற்ற முடையாரோ ஜகமுழுதுமாயுள்ளார். கரத்துழி கடகம் பிடித்த வனைக் கொல்லாவிரதி யல்லனெனல் போல், இந்திரிய வாசனாபோகியையும் இந்திரிய நிக்ரக முடையோனல்லனென்றுரைலாம். நிசதன்ய சாநித்ய சந்தப பிரம்மாநந்தமாகிய யானையை யினையாய்த்தேடுஞ்சிங்கம, யானை தப்பிப்போயிற்றென்றால் விஷயானந்தமாகிய தேனையை யுண்ணுமா? உண்ணு. ஜனகாதி நால்வர்க்காகப் பரமபதியாகிய சிவனே துறந்து கல்லாலின் கீழமர்ந்து ஞானசமாதி முறையை யறிவித்ததாக ஆகமங்கள் சொல்லுமாயின், உயிர்த்தொண்டர்களாகிய திரிமலத்தோர் துறவிலாது கொளுஞ்சமாதி என்னசமாதி? அந்தோ மோசம்! மோசம!!

ஆணவமாகிய அகங்காரத்தோற்றமும் * ஆத்மாவின் சாயையும் அயமும் அக்கினியும போலப்பிரிவின்றிக் கலந்துள்ளதை ஞானத்தாற் பிரிந்துத தன்னைத் தரிசித்துச் சச்சிதானந்த மஹோற்சவங் கொண்டாடுதற்குத் துறவே இரக்ஷாபந்தனமாகிய காப்புக்கட்டாகும்.

## துறவுக்குரிய கட்டளைகள்.

பற்றறுத்து மனம் ஏகாகாரப்பட்டுத் துறந்த விவேகியானவன்;

(க) கௌபீனமேனும, சுத்தவஸ்திரமேனும் அழகில்லாததாய் அணியக்கடவன்.

(உ) வஸ்திரம் முதலாகிய பூஷணாதிகளையும், வாசனைகளையும் அபேக்ஷியாதிருக்கக்கடவன்.

(ங) தான் புசிப்பதில் வாய்த்ததை வாங்கிச் சுவையின்றி யுண்ணக்கடவன்.

---

* ஆத்மாவின் சாயை. சிதாபாசன்.

(௪) அன்பிலா ரளிக்கும் அன்னபானாதிகளை அருந்தா திருக்கக்கடவன்.

(௫) முறையற்ற பல்லோடு நிகழக்கடவன்.

(௬) அவசியமானதன்றி மற்றும் வார்த்தையொழிந்தவனாய் வாழக்கடவன்.

(௭) * தசனங்காட்டி நகையா திருக்கக்கடவன்.

(௮) பாஷண்டவாதமான மதாபிமான தர்க்கங்கட்குக் கர்ணங்கொடா திருக்கக்கடவன்.

(௯) வர்ணாச்சிரம பேதாபேதங்களை விட்டுவிடக்கடவன்.

(௧௦) ஆசிரியனையும், அறிஞர்களையும், ஆரணிய வாசிகளாயுள்ள தபவேஷதாரிகளெவரையும் வந்தித்துக்கொள்ளக்கடவன்.

(௧௧) யாவரேனும் தனக்குச்செய்யும் வந்தனை வழிபாடுகளைச் சிவப்பிரீதி செய்யக்கடவன்.

(௧௨) வெப்ப தட்பஞ் சகிக்கக்கடவன்.

(௧௩) தரையிற் படுக்கக்கடவன்.

(௧௪) ஊணுறக்கத்தை யற்பமாக்கி யோகநித்திரையா யுறங்கக்கடவன்.

(௧௫) பல்விடத்தும் பயமிலாது உண்ணோக்கா யுலாவக்கடவன்.

(௧௬) பிறர்தம் பிழைகளினும் வியப்பென நோக்கா திருக்கக்கடவன்.

(௧௭) அறியாமையால் பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளக்கடவன்.

(௧௮) பெருமை யில்லாதவனாய்க் குழந்தைகளைப் போற் குணங்காட்டி யிருக்கக்கடவன்.

(௧௯) நான் எனதென்னும் அபிமானச்செருக்கை யறுக்கக்கடவன்.

---

* தசனம் : பல்லு.

(௨௦) சென்றதையும், நடப்பதையும், வருவதையுங்குறித்துக் கவலையற்றிருக்கக்கடவன்.

(௨௧) ஒன்றில் விருப்பு வெறுப்பின்றி, நலமும் பொலமும் சமமாய்ப் பொன்னும் ஓடும் ஒன்றென மதித்து நிர்விகற்பமாய் விளங்கக்கடவன்.

(௨௨) ஈஸ்வரோபாசனையை இடையறாது விருத்திக்கக்கடவன்.

(௨௩) தனது தபானுபவத்துண்டாகும் சிவரகசிய தோற்றங்களை அவசியமின்றி வெளியிடாதிருக்கக்கடவன்.

(௨௪) தன்னுடைய வெண்ணத்தைத் தனித்திருந்தே முடிக்கக்கடவன்.

(௨௫) பரமசிவத்தின் பதப்பிராப்தியாகிய கைலாய வீடடையுமளவும் இந்தத் துறவிலிருந்து சாதிக்கக்கடவன்

துறவிக்கு ஞானசந்தானமே ஸ்நானமும், உகந்த கோலமே ஆசாரமும், வாய்த்ததை வாங்கி யுண்பதே பூஜையுமாயிருக்கும். இந்நிலையையே சுத்தசமாதியென்றும் ஆன்றோர் ரதிப்பர.

மேலே பிரகடஞ்செய்த கட்டளைகளிற் சில பரிசுகள் குறித்து இங்ஙனந்தெளிவாய் வெளியிடுவோம். ௨௨ - வது கட்டளையான ஈஸ்வரோபாசனையை விருத்திப்பதெப்படியென்னில், தனக்கு ஞானாசிரியர் போதித்த முறைகொண்டே. அதில்,—கடவுள்பேரில் நல்ல பிரியமாயும், மரியாதையாயும், பிதா பிள்ளையென்கிற முறையாயுமிருக்க வேண்டும். வாற்சல்யமாய், அதாவது உள்ளுருக்கமாய் நாடவேண்டும். கன்றைத்தேடிப் பசு கதறுவதுபோற் கதறவும் வேண்டும். தன் எலா நிலைமையை நினைந்து பிதாவே! நீர் என்று வந்தருள்வீரோவெனப் பெருமூச் செறிந்து மயிர்க்கூச்செறிய என்பு நெக்கு நெக்குருகத்

தேங்கித்திகைத்துத் தியாத்துவஞ்செய்து காலைக்கிடைக்
குமோவென வுள்கிக் கண்ணீருகுத்துத் தாரை தாரையா
யொழுக அழவும் வேண்டும். நல்ல தோத்திரமாய வேதா
ந்தரசமாய்த் தானேயாவது பிறர் பாடியதையாவது அன
பாய்ப் பாடவும் வேண்டும். அப்படிப் பாடுவது அதிகச்
சப்தம் போட்டாவது, ஆலாபனம் பண்ணியாவது, அன்
னியர் செவிக்கின்பமா யிருக்கவேணுமென்றாவது பாடொ
ண்ணா. ஏனெனில்; மனம் அந்தவழி செல்லுமென்பது
பற்றியன்றோ. ஆதலால், இரக்க வுருக்கங்காட்டி தெய்வ
முன்னிலையிற் சொல்லுவதுபோல இலாலனைப் பதமாய்
விரைவில்லாததாய்ப் பாடவேண்டும்.

## பிராமாணியம்.

**பிரமன் தேவர்கட்கு வடமொழியிலருளிய பிரமகீதை
ப்படி, தத்துவராய சுவாமிகள் தென்மொழியிலரு
ளிய பிரமகீதை ஐதரேய வுபநிடதப்பொ
ருளின் சேடமும் தைத்திரீய வுபநிடத
தாற்பரியமுரைத்த அத்தியாயம்
௪௫-வது செய்யுள்**

"உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளு மிறை
யென்று, மிலகியவை திக்கீதைக் கேன்செய்யா
னிறையதனை, நலமிகுந்த பொருள்வேண்டி
நலமிகுபத் தியினோடும், பலமிகுந் கீதைக
ளே யெப்பொழுதும் பாடுவான்."

**ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவாசகத் திருச்சதகம்
௯௧-வது பாட்டு.**

"ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை
யென்புருகிப், பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்
கிலை பணிகிலை பாதமலர், சூடுகின்றிலை சூட்டு
கின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே, தேடு
கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்
றறியேனே."

இப்படிக்கான நிஷ்காம பக்தி விசுவாசத்தால் தெய்வ நேசங் கிடைப்பதுமன்றி, உண்மைஞானமும் உண்மைய ருளும் பிரகாசிக்கும். சிறந்த பக்தி விசுவாசத்தைக் கட்டுவாங்கனென்ற அரசன் இரண்டு நாழிகை செய்ததி னின்று அப்போதே அரிய மோக்ஷத்தைப்பெற்றதாகவும் பிறவும் அனேகர் அவ்விதம் பெற்றதாகவும் அபூரிதமின்றி வெளியாவதால், அவ்வித பக்திவிசுவாச சாதனங்கள் சிறந்த தத்துவக்ஞானிக்கும் அவசியம் வேண்டியதுதான்.

பரமசிவத்தின் அருளனுக்கிரகமாயப் பெற்றகுட் புவன போக மூலமான திரப்பியமெனும் பொருள் எதிரிடை யாகும் அதைத் தொலைத்துத் தம்மை நாடினிற தடஸ் தமான ஆத்மாவுக்கே சிவம் அருளபுரிந்து தேவையான சிறப்பைத் தாமே நல்கும். ஆசையுள்ளவனப்படியானவ னேல், அவனிடத் துள்ள தொல்லை முரிந்துகொள்ளும். இது சிவசுபாவமே

தவத்துக்க கங்கமாய ? டைமையுடைய சிலகயேனும வள்ளா கக்வேண்டும். அல்லது முன்மை தரு செயதுகொளள வேணடும்.

## இந்நன் பிரயோஜனம்பற்றிய பிரமாணம், சிவபுண் ணியத்தெளிவு ௯௩ - ௯௪ - வது சூத்திரங்கள்.

"பத்தர் நான்முறை வேணி பரித்திடி
லொத்த வற்றுறு வேணியராய் லொன்றிற்கு
மெத்து மக்களை மேத பலத்தினைச்
சத்தியமமவனை நாமம் றுறுஞ் சாதமே"

"ஆண்ட வானனுக கண்டொடு முண்டிதங்
கொண்ட நீளசிகை யாயினுங் கொண்டுளோ
பண்ணு ருந்திர மேத பலத்தினோ [ர்
ரொண்டி சூழ்ந்த திணைந்தொறு செய்துவார்"

நவவேஷதாரிகளாகிய ஈசனடியார் எக்குலத்தாராயி னுந் தென்படில் சங்கோசமின்றி வந்தித்தல் கடமை.

மாறுபடிற தீதாகும். இல்லறத்தும் துறவறத்தும் இது பொதுவே.

**பிரமாணம்.**

**பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்**

**சஉ-வது யாப்பு.**

"எந்தக்குலத்திற் பிறந்தாலு
மீசனடியாராக விழுக்கில்லை
நிந்தைசெய்தோர் நரகுறுவார்
நிச்சயமே யையமில்லை
மைந்தரோடு மனையோடு
மாளாதிருந்த நிதியோடும்
எந்தையடியார் மனங்கலங்கி
லீரேழுலகுங் கலங்காவோ"

துறவுநெறி நின்றோருக்கு மனத்தில் இகழ்தலும் புகழ்தலு மில்லாமலும், பின்னொன்றாந் தன்னுமலும் வாய்ந் ததையே யுண்ணவேண்டும். காடிகூழுண்ணுங்கால் வெறுப்புறல் தவக்குற்றமாம். வாய்ந்த பலியைச் சிவச்செயலென்றே யுண்ணத்தக்கது. மற்றப்படி யெண்ணல் ஜீவச்செயலாய் முடியும்.

சிவச்செயலை மறந்து ஜீவச்செயலால் தனக்கு இடுக்கண் வருவதாயச் சிந்தித்து எவரையுஞ் சபிக்கொணாது. தபமுடையோ ரவ்விதஞ் சபிப்பது சிறு பிள்ளைகள் பாலலீலையிற் குட்டினவ னிருக்கக் குட்டாதவனை மற்றொருவன் காட்ட அவனைத் தாக்குவதுபோ லாகும். அதனா லரியதபமும் போம்.

**போந்தசான்று.**

**அந்தாதிப்பாணி.**

"கோப மிக்கவ்போ தேவ ராறுவார்
குறுகு வோர்தமைக் கொடிய நோய்புகும்
சாப மிடுமோ தவர்க ளாயினோர்
தலைமை மிக்கதந் தவமி ழப்போர்".

தவநெறியி லதிகட் பசிவந்தா லுண்பதும், அதிக நித்திரைவந்தா லுறங்குவதும், பகல்நித்திரை புரியா திருப்பது மொழுங்காகும் பிறவித் துன்பத்துக் கஞ்சினோர்க்கு நித்திரையும் வாரா. பின்னர் பேசப்படும் ஞானசமாதி கூடாதிருந்து உறங்குநாளெல்லாம் மனிதப் பிறப்பான நாளினும் வீணேகழிந்த நாளாகும்.

நோய்க்கிடமின்றி மிகாமலுங் குன்றாமலு முறங்கி சித்திரமடோற் சுகாசனத் தசைவற விருந்து யோகம் பயிலில், காமம் தலைமெடுப வருந்தா. நித்திரை மிகுந்தவிடத்தும், சமாதிகூடுமிடத்தும் மன மிறந்தலினாலும், பசிமிகுந்தவிடத்தும் உடலை நிசரிக்கு மிடத்தும் மனக்களிப்பு மடிதலினாலும், பிறவிப் பிணியை நினைக்குமிடத்தும் வீட்டின்பத்தை நினைக்குமிடத்தும் முறையே அச்சமும் ஆசையுந் தோன்றலாலும், காமம் பொருந்தற்கிடமின்று. புழுக்குடையு மலப்பொதியாகிய யாக்கை யென்றைக்கு நீங்க யாருஞ்சுகப்படுவே மென்றுள்ளும் விவேகி, சரீர சம்பந்தமான பெண்ணாசையை யிச்சிக்க ஹேதுவில்லை. நாய்க்குத் தருவிற றதத்திய அனில் கிட்டாதுபோயினும் கண் டிச்சைப்படல்போல் முன்னூற்ற மாதவமுடையாரிற் சிலர் மாதரைக் கூட வியலாவிடினும் அரம்பையாதி ஸ்திரீகளை நோக்குற் றறிவழிந்தனர். அஃது துறவாமா? சிறு கன்னிகைகளைப் பரிகாசமாய் இவளென் பெண்டென்பவன்; தன்புத்திரியை அம்மன்னைரு சொல்லத் துணியான். ஆதலால் அதுவுங் குற்றமன்றோ. ஆயின், இவ்விடயத்துப் பிழைபடாதுய்வ தெங்ஙன?

ஆண்குறி யெழுப்பமற்ற விருத்தாப்பியனும் நபும்சகனும் ஆண்மையற்றவனும் ஸ்திரீகளைத் தழுவவிரும்பலால் அது மனத்தினிட முண்டாகிற காம மாகவும், வியசனத்தாலேனும் துறவுநெறியாலேனும் ஸ்திரீகளி னின்பத்தை விரும்பாதவனால் ஆண்குறி யெழுப்பமானவுடன் அவ்

விரகந் தோன்றலால் அது உணவினிடமுண்டாகிற காமமாகவும் இருவகை காணலாம். இவ்விரு வகைக்கு மிடமான உணவையும் மனதையும் அடக்கினாலன்றி ஒருவருக்குங் காமநோ யடங்கா. இது துணிபு. உணவு விவரத்தைப் பின்வரு முத்தி யிலக்கண வியாக்கியானத்தி லுணரலாம்.

கற்புடையாளுக் கிக பரத்து மின்பம். வியபிசாரிக் கிக பரத்துந் துன்பம். அதுவன்றிய நிராசை யுடையார்க் கிக பரத்து மின்பமுண், கூடா வொழுக்கமுடைய கபட சன்னியாசிகட் கிக பரத்துந் துன்பமுமே யாம்.

துறவி, புணைபவு முரிப்பட்டனவுமான இருவகைப் பண்டங்களையன்றி வேறெதையு மேற்றுக்கொள்ளலாகா

பாழ்ங் கோயின் முதலிய விடங்களில் இராக் காலங்களி லிருக்கினும், சிவஞாற் காக்கப்படு முடம்புக்கு மதியில் யாதொரு அழிவு மில்லையென்று சிவச்செயலை விடாதுகொண்டு யாக்கையை யிறைவன்பா லொப்புவித்தது ஞான மொன்றினையே பிடித்துக்கொள்ள வேண்டும்.

பேய்களானும் பூதங்களானும் தேவர்களானும் ஞான சமாதிக் கிடையூறு சம்பவிக்கினும் விடாப்பிடி பிடித்திருத்தலே இலபிக்கு முத்திக் குபாயம்.

தைத்யர் இராக்ஷதர் தேவர் முனிவர் சித்தர் வித்தியாதரர் முதலியோர் அஷ்டமஹா சித்திகளையும் ஊர்த்த போகங்களையும் ஏற்கும் பொருட்டு பீதி நேசம் ஆசை கருவம் அபிமானம் பசி தாகம் முதலியவை இறையேனு மனத்தினகட் பொருந்தாது நீத்துத் தவமிழைத் தெய்துவாராயின், அச்சித்தி புத்திகட்கும் ஜேஷ்டமான வீட்டின்பமாகிய நித்திய வியக்தவியய மூல போகவிஷத்தினை மேம்பகாரத பீதி முதலியதுளளா ரெய்துவரோ? எய்தார். ஆதலால், அவைகளைக் கனவே தபானுபவச சுயானுபூதியி லுயர வேண்டும்.

ஜீவகரணங்கள் சிவகரணங்களாய் விளங்குவதே அருட்டரிசனமாகும். அந்தத் தரிசனமே தன்னையுந் தலைவனையுந் தரிசிக்கச்செய்யும். தன்னைத் தரிசிக்கும் போதமாகிய **சிவஞானதீபத்தை** அஞ்ஞானமாகிய அந்தகாரஞ் செறிந்த அகத்துழி பிரகாசிக்கச் செய்யுமவதரம் அங்கை மற்ற படிகம் போன்று தானாக வியாபியாய்ச் சிவத்தினறிவிலே கலந்து நின்று கண்ணுங் கதிரவனும்போ னிகழும் ஆன்மாவைக் காண்பதுடன், அங்குள்ள இரகசிய மெல்லாம் ஒழியாது தோன்றும். அவ் விதத்தாந்தத்தைப் பின்னே பேசப்படும். இம்பா குயிற்றுவ தென்னையேல், பிராணாபானத்தை அடையோகத்துக்கு எட்டங்கமுள்ளதேபோல், நுவலுற சிவஞானத்தை அப்பியாசிக்கும் ராஜயோகத்துக்கும் எட்டங்க முண்டு.

## எட்டங்க விவரம்.

(௧) **இயமம்.** அதாவது — விஷயங்களில் மனத்தை விடாது தடுத்தல்.

(௨) **நியமம்.** அதாவது — ஆத்மாவை அசுத்தப்படுத்தக்கூடிய விஷயாதிகள் தன்னிடந் தோன்றுமாயின் அப்போதைக்கப்போதே நீக்கித் தன் கொள்கையை மேற்கொள்ளல்.

(௩) **ஆசனம்.** அதாவது — தனக் குபாதியில்லாமல் எப்படியாவது நிருபாதிகமான ஓராசனத் திருந்துகொள்ளல். அது கிடக்கையிலேனும் இருக்கையிலேனுங் கூடும்.

(௪) **பிராணாயாமம்.** அதாவது — இரேசகத்தையும் பூரகத்தையுங் கும்பகத்தாற் றடுத்தல். எப்படியேல், உண்மையற்ற கடாமடாதி தோற்றங்களை யுண்மையென விச்சித்து வாயுவைப்போற் சுழலுகின்ற வாயு வம்சமாகிய மனத்தை விருத்

தியொன்று மின்றி ஹிருதயகமலத்தி லடைத்தல்.

(ரு) **பிரத்தியாகாரம்.** அதாவது — பகிர முகத்திற் செல்லும இந்திரியங்களை அந்தர முகத்திற் றன் மனதோடு சேர்த்து உறுதியாய் அதாவது இந்திரிய விஷயாதிகளாகிய பலபாணங்கள மனமாகிய பாஷாணத்தின் மீது குப்பல் குப்பலாய் வந்து பாயினும் அது அசைக்கப்படாதிருப்பது போன்றும். விஷயாதிகளில் வெறுப்புற்றவனுக்கே இது சாதகியமாம்.

(சா) **தாரணை.** அதாவது — அந்தர இந்திரியங்களால் துவைதமற்ற ஒரே வஸ்துவை உள்ளுக்குள தியானிததல். விவரம் விஷயவாதனை யின்றி பரமாத்மாவை நோக்கி நிறறல்.

(எ) **தியானம்.** அதாவது — தற் சொரூபததை நாடுதல். தாரணையினை மேனபாடே இநதத் தியானமாகும. இது எல்லாருக்கு மெளிதிலெயதா. ஆதலால விஷயாநந்தஙகளிற பகிர முகம் போம் மனததை மீட்டு மீட்டு நிரோதஞ் செயது பரமாதமாவை எஙகு நிறைந்து பூாததிகரமான சினமய சொரூபமாய்த தியானிக்கத் தககது. இதுவே **பிரம்மோபாசனை.**

(அ) **சமாதி.** அதாவது — உள்ளும் புறம்பும ஒளிவாகத தானேவிளஙகி அசஙகமாயத் திரிபுடியைக்ய ஞேயததமுநதி நிறறல்.

**பிரமாணம்**

**ஸ்ரீ குமாரதேவர் பிராயசித்தி யகவல்.**

"காமாதிகளைக கைவிடலியமம்
விட்டபொருள்கண் மேவிடிற்றள்ளி
நிற்குதனியம நிருபாதிகமாய்

ஓராதனத்தி லுறைகுத லாதனம்
நாமரூபத்தை நாடுமனத்தை
இருதயமதனி லிருக்கப் புகுத்தல்
பிராணாயாமம் புறவிட்டயத்தைப்
பெயர்த்துளே மீட்டல் பிரத்தியாகாரம்
விடயவாதனையை விகற்பற நிறுத்தல்
தாரணையாகுந் தற்சொரூபத்தை
நாடறியான நவிற்றிடும்புறமும்
உள்ளுமற்றவ வொளிதானேயாய
ஒத்துநின்றிட லேயோங்கியசமாதி
ஆதலினிந்த வட்டயோகமதும்
பிரமசித்தி பெறுதற்கங்கம்."

அங்கம் எட்டில், ௧-முதல் ௭-வரையுள்ளவை **துவைதமாகிய** சபீஜமென்னும் **சவிகற்ப** மாகவும், ௮-வது **அத்வைதமாகிய** நிர்பீஜமென்னும் **நிர்விகற்ப** மாகவுஞ் சொல்லப்படும்.

## சவிகற்ப நிர்விகற்பவிவரம்.

சவிகற்பம் ௨-விதம் அதாவது **திருசியானுவித்த சப்தானுவித்த** மென்பனவாம்.

மேற்படி சவிகற்பமாவது — மனோவியாபாரத்துக்கெல்லாம் ஆத்மாவே சாக்ஷியென்று கண்டு அதைத் தன் ஞானத்தாலறியப் பரமாத்மாவைத் தியானித்து நிற்றல்.

நிர்விகற்பமாவது — சமாதியிற்றன்னை யறிந்த வனந்தரம் காசமற்ற கண் சூரியப்பிரகாசத்தோடே சேர்தல் போற் பரிச்சேதமின்றி விபுவாய் பிரமமாகிய பரமாத்மா நானேயென்று நிற்றல்.

சவிகற்பத்தில் திருசியானுவித்தமென்பது — வெளி வஸ்துக்களை நோக்கி அவைகளின் சத்தினின்றும் நாம ரூபத்தைப் பிரித்தல்.

சவிகற்பத்தில் சப்தானுவித்தமென்பது — சச்சிதானந்த பிரமம் மட்டுமே உலகிலுண்மைப் பொருளென்று தியானித்தல்.

குறிப்பிட்ட வஸ்துவினிடத்துக் கூடிய சவிகற்ப சமாதியின் முதிர்ச்சியே அகண்டமாய் நிற்கக் கூடிய நிர்விகற்பத்தை யளிக்கும் சவிகற்ப மற்றது நிர்விகற்பம். இதுவே **சிவோஹம்பாவனை.** சோஹம்பாவனை யென்றுஞ் சொல்லுவர். 'சோஹம்' என்பது — அவன் நான் என்னும் ஓர் மஹாவாக்கியமாகும்.

நிர்விகற்ப சமாதி வாய்க்குமுன் ஒருவன் **நானே பிரமம மென்று சொன்னாலும், பாவித்தாலும், நினைத்தாலும்** பிரமமஞானத்தை அறவும் பெறாமல் கொடிய நரகமே போய்ச் சேர்வன். பிரம்மஞான திருஷ்டி யொருவனுக்குண்டாகித் தன்னையுந் தலைவனையும் தெரிசித்திருப்பானாயின் பரிசுத்த தேஜோமய ஞானசொரூபியாய், எவ்வாறுமழிவற்ற ஜீவன் முக்தனாய், சர்வ அண்ட பிண்ட சராசரங்களினும் நடந்த நடக்கிற நடக்கப்போகிற சமஸ்தத்தையு மறிந்தவனா யிருப்பான். இங்ஙனம் பிடிபடாமல், அத்வைதக் கொள்கையிலனேகர் **நானே பிரம்ம** மென்றலைந்தருளில்லாது கெட்டார்.

இயம்பிய எட்டங்கத்தினும் ஞான சிவராஜ யோகத்துக்குப் பிரதானமானவை தாரணை தியானம் சமாதி என்ற மூன்றுமே. ஏனையவை தாரணையிலடங்கி யிருக்கின்றன.

சவிகற்பசமாதி, தாரணை தியானம் கூடிய அகமும் புறமுஞ் செய்யலாம். ஞான சிவராஜ யோகமானது உள்ளுக்

ஞானியே [illegible] னிக் கழிக்கரிய காலத்தில். அவ்விதமே மருகக்கேவலாமும் [illegible] சமாதி முறை கூடும் விதத்தை பின்னே கவ[illegible]. ஆன்டே பிராணாயாம விவரமுந் தெளிவாய் வெளியாம். இம்பா கவனிட்ட தெளலேயேல்;

## திரிபுடி விவரம்.

சமாதியிற் கூறிய திரிபுடி யாதெனில், (௧) ஞாதுரு (௨) ஞானம், (௩) ஞேயம் என மூன்றுமே. ஒருவஸ்துவைக் காணக்கூடியவனே ஞாதுரு. அப்படிக்காணக் கண்ணுயிருந்ததே ஞானம். அந்த ஞானத்தாற் காணப்பட்ட சைதன்ய வஸ்துவே ஞேயம். இவற்றுள், துவைதயான முதலிரண்டும் மூன்றாவதான வஸ்துவின் தன்மையைப் பொருந்துவதே ஐக்யம.

## தியான மாந்துவம்.

ஏழாவ தங்கமாய் வழுத்திய தியானத்தை சிந்தை மருவுமுட னினும செய்யப்படுவது பதின்மூன் றிமை நேரமாயின கோதான பலனையும், நூறிமை நேரமாயின் ஆயிர மஸ்வமேதப் பலனையும், அரைக்கடிகை யாயின் இலக்ஷ மஸ்வமேதப பலனையும், ஒருகடிகை யாயின் இராஜசூயயாகப பலனையும், பதினெந்து கடிகையாயின இலக்ஷம ராஜ சூயயாகப பலனையும், ஒரு நாளாயின பிரம்மப் பிரசாபத்தி லமாதலையு மடைவித் தருமென வறியலாம்.

உதாரணம்.

வசிஷ்ட மஹாமுனிவ ரருளிய ஞானவாசிட்டம் தேவபூஜை கதை ௩௭-௩௮-௩௯ - வது செய்யுள்கள்.

"திகழாத்த துமத்தது வக்கிர ளையுமே
தியான முபகா ரங்களிரும்

20

திகழ்பூ சனையர் [illegible]
பிறிதோர் மறைகளிலுற்
புகழுமைய யுணர்வு கிடையாது
பூரண நியான பூசையினை
யிகழ்மூ டர்களசெய் யினும்பதின்மூன்
றிமைப்பிற் பசுவீந்துளபேறும்."

"இயலார் கடவு ளாந்தன்னை
யிமை நூறளவும் பூசிக்கி
லயமே தந்தி லாயிரமாம்
பேரு மனாநா ழிகைப்பூசை
முயல்வா ரிலக்க மயமேதப்
பயனைப் பெறுவர் முறைமையினாற்
பயனார் பூசை யொருகடிகை
பண்ணில் ராஜ சூயபலம்."

"பாச மின்றி யுள்ளுணர்வைப்
பதினைங் கடிகை பூசிக்கில்
ராச சூய விலக்கங்க
ளிவ்வா றொருநா ளருச்சிக்கி
லாசி லாத பரவொளியி
லமர் லாகு மிதுதானே
யேசில் பரம யோகமிது
தானே பரம கிரியையுமே."

வழுத்திய சமாதியில் அறிவு மயமான ஆத்மாவைத் தரிசிக்க வருமுறையும் அதற்கு நிலையு மெப்படி யென்னில், போககாண்டம் ஏழில் (க) மாயையைச் சிவதத்துவமும், (உ) கலை (௩) காலம் (௪) நியதி இவைகளைச் சத்தித்தத்துவமும், (௫) இராகத்தை ஈசுரதத்துவமும்,

(௬) பிருடனை[illegible]தாக்கியதத்துவமும், (௭) வித்தையைச் சுத்தவி[illegible]தையுமாய்த் தூண்ட, பிரோககாண்டம் ஐந்தில் (௧) ஈசுரதத்துவத்தை இச்சாசத்தியும், (௨) சாதாக்கியம் (௩) சத்தி என்பவைகளைக் கிரியாசத்தியும், (௪) சுத்தவித்தை (௫) சிவதத்துவம் என்பவைகளை ஞானசத்தியுமாய்த் தூண்ட, கரணங்களை அக்கரங்களும், அக்கரங்களை மூர்த்திகளும். மூர்த்திகளை மேற்கண்ட இச்சா ஞானக் கிரியைகளுமாய்த் தூண்டக் காரியப் படுவதனறி தத்துவங்கள் தாமே வந்து ஆத்மாவைப் பொருந்தா வென்றும், அவ்வாதமா தானே வந்து தத்துவங்களைப் பொருநதா தென்றும், பெந்தத்திலும் முத்தியிலும் விட்டு நீங்காம லிருக்கிற அருளுக்கே இது சுதந்தர மென்றும் கண்டுதனக்கொரு சுதந்தரமு மின்றி ஞேயததழுந்தி நிற்பதாம.

## ஞானசிவராஜயோகம் எவ்வருக்தும் பொதுவெனல்.

மிழாறிய எட்டங்கசுத்தில தாரணை தியானம் சமாதியெனு மூன்றையும பிரதானமாக வுடைய இந்த ஞானசிவராஜயோகததை எநத மதஸ்தரும் இல்லறததிலேனும துறவறததிலேனு மனுஷடிககலாம. அதற்கு விஷய வாசனைகளே முதலி லடங்கி வரவேண்டும். அவவாசனை கெடுமாயின், சுததிதத தாமபிரத்திற்களிம் பூருததுபோல தானே சுதத வாசனையால விஷயங்க ளோடே கூடினும் பெத்தமின்றித திடஞானுகாரமாய்ப பிரகாசிக்கலாம். இதற்கு அமலராமாயணததி லதிாததபடி பகீரதன் சிகித்துவசன முதலியோா சரிதஙகளே சான்று.

இந்த ஞானனுபவ யோகத்தை இரண்டுவிதமாய் அனுஷ்டானஞ் செயயவேண்டும அதாவது—

௧-வது பரோக்ஷஞான யோகானுபவமாயும்,

௨-வது அபரோக்ஷஞான யோகானுபவமாயுமாம்.

## ௧௦-வது பரோக்ஷ [illegible].

(௧) மனதை ஒரே யிடத்தில் வைக்குந்தன்மையி லுண்டாகும் ஆத்ம மனோரூபபாவனுனுவமானது பிர்ம்ம ஞானபாவனுனுபவ மாகவேண்டும். இதற்கு லக்ஷிய பாவனுனுபவம் என்று பெயர்.

(௨) இந்த லக்ஷியபாவனுனுபவத்திற் கவலையிருக்க வேண்டும்.

(௩) இதன்மேல் ஞானதிருஷ்டி யனுபவம். அதாவது:—சர்வதத்துவலயானுபவம், பிர்ம்மபாவருனுபவம், பிரம்மலக்ஷியானுபவம், பிர்ம்மதரிசனுனுபவம், பிரம்ம திருஷ்டியானுபவம், பிர்ம்மசொரூப லயானுபவம், பிரம்மாம்ச ஐக்யபோதானுபவம், பிர்ம்ம மயத்தோதன்மய சர்வைய பதார்த்தானுபவம் என்பவைகளாம்.

(௪) இதன்மேல் ஆத்மப் பிரம்மசொரூப லய போத பாவனுனுபவம். அதாவது:— மேலே சொன்ன அனுபவத்தைக் கெடுத்து உயர்வதாம்.

(௫) ஆத்மப்பிர்ம்மாம்ச லய போத பாவனுனு பவமா யிருக்கவேண்டும். அதாவது —துவைதத்தியானதமும், தேடுகிற தன்மையும், ஒரு இடத்தில் வைக்கிற தன்மை யும், அறிகிற தன்மையும், பார்க்கிற தன்மையும் தனிநிற்பதாம், இவாதசாந்தவிவரம் பின்னே வரும்.

(௬) மனம் - ௧, ஆன்மா - ௧, பிரம்மக்ஞானம் - ௧ ஆக மூன்றும் ஐக்யபோதபாவனை தீதானுபவமா யிருக்க வேண்டும்.

(௭) மேனிகழ்த்திய ஆறுவிதத்திலுமடங்கின வஸ்து வாகக்காட்டும். அதாவது — சர்வபாவனுதீதானுதி சத்ய நித்ய சுத்தோ கேவல மாத்ர மயானுபவ மாய்க் காட்டும்.

முதலிற் சொன்ன லக்ஷியபாவனானுபவத்திற்கு முக்கியமாயத் தெரிந்து கொள்ளவேண்டியது மூன்று நாடிகளின் நடையையே. நாடியென்றால், ஞானதிருஷ்டியைப் பாவனையிற் பற்றுற ஹேதுவான கலையாம்.

## நாடிகளின் விவரம்.

௧. சந்த்ரகலையாகிய இடகலை.

௨. அக்கினிகலையாகிய சுழிமுனை.

௩. சூரியகலையாகிய பிங்கலை.

இம்மூன்றையுமே இந்நூலகம் பேசும் யோகத்திற்கு வாசி யென்றறியக்கடவது. இந்த வாசி பிரமரந்திரத்தி லிருந்து பன்னிரண்டாதாரத்தையும் உள்ளிட்ட மூன்று மண்டலத்தையும் ஊடுருவிக்கொண்டு மூலாதாரமென்னுங் கீழ் நோக்காயச் செல்வதற்கு அதோமுகஞானவாசி என்றும், மூலாதாரத்தி லிருந்து ஒரு வழி யெடுத்து முதுகு எலும்பின் நடுவழி கூடிப் பிரமரந்திரத்துக்கு மேனோக்காய் எழுவதை ஊர்த்துவஞானவாசி என்றுஞ் சொல்லப்படும். அதோமுகவாசி இரேசக பூரகமும், ஊர்த்தமுகவாசி கும்பகமுமாம். இரேசகத்துக்கு ௧௬-ம், பூரகத்துக்கு ௩௨-ம், கும்பகத்துக்கு ௬௪-ம் மாத்திரையாகும். இம்மூன்றுக்கும் முறையே அகாரம், உகாரம், மகாரம் பிரணவமாகும். இவைகளே முப்பிரணவம். மாத்திரை யென்பது ஒரு சாணு மண்டலம். அதாவது — அங்கையால் முழங்காலை வளையமாய்த் தட்டு நேரம்.

**பூரகம்** என்பது உள்ளே வாங்கல். **இரேசகம்** என்பது வெளியே விடல். **கும்பகம்** என்பது ஸ்தம்பித்தல்.

இந்த வாசியோக நிஷ்டையையும், ஆதாரங்களையும், அவைகளிலுள்ள கோணம் கமலம் அக்ஷரம் அதிதேவதைகளையும், அந்தமச் சூக்ஷ்ம முழுது திருந்த கிரமத்தையும், மூன்று மண்டலங்களையும் மூன்று நாடிகளையும் ஆவுடையிலிங்க விவரத்தையும் இவ்வாசிய ஷடாக்ஷரோபதேச

மென்னும் சிவஞானதேசிகமென்ற பெருநூலின் உ௫-வது வியாசத்தின் ௬-ம் பாகமாகிய யோகத்தில் யோகபாவனை யென்றும் ஆராதார நிகமமென்றும் ஏற்படுத்திய ௯-௧0-வது படங்களில் தெளிவாய்த் தெரியலாம். அந்த யோக பாவனையே **பத்மாசனம்**. அந்தப் படத்தில் அடையோகத்திற் கான முக்கிய ஆதாரங்கள் ஆறை மட்டுந் தெளிவாய்க் காட்டி யிருக்கின்றன. மற்றும் மேலாதாரங்களாறையும் இந்நூலிலேயே வெளியிடப்படும். இங்கே தீமானிக்கும் ஞான சிவராஜயோக நிஷ்டையே புஜத்தின்று கீழ்ப்பாகம் ஆவிடை யாகவும், மேற்பாகம் இலிங்க மாகவும் விளங்கத் தக்கது. சூட்சும லிங்கம் ஆத்மா. இதுவே ஆவிடைலிங்க ஐக்கி மென்றும் அண்ட பிண்ட சராசர இரகசியமென்றும் அறிக. அதனுடைய முடிபெடுத்து இவணுவலுவேம்.

## முக்தி யிலக்கணம்.

முக்தியில் உருவச்சித்தி யென்றும், அருவச்சித்தி யென்றும், உருவருவச்சித்தி என்றும் மூவகையுண்டு. அவற்றுள் சைவசமயாசாரிக ளானவருள் ஒருவரா யெழுந்தருளியிருந்து தமிழ் மறையாகிய தேவாரம் பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரும் அரசராகிய சேரமான் பெருமாணாயனாரும் கரி பரி யேறிக் கைலைக் கெழுந்தருளப் பெற்றது உருவசித்தியாகும். இத் திருமேனியைச் சுத்ததேக மென்றும், ஸ்வாணதேகமென்றும், பிரணவ தேகமென்றுஞ் சொல்லப்படும். மேற்படி நால்வரிலொருவராகிய திருவாசகத் திருமுறை சொன்ன திருவாதவூரடிகளெனும் மாணிக்கவாசகசுவாமிகள் திருமேனியுடன் ஸ்ரீ சிதம்பர சிற்சபைக்கண் சிதாகாச பரமாகாசத்திற் கூடப் பெற்றதும், மஹாராஜாவாகிய ஸ்ரீ குமாரதேவர் அகண்ட பரிபூரண சொரூப வியாபகத்திற் சேரப் பெற்றதும் அருவசித்தியாகும். மேற் சொன்ன நால்வரில்

முதல்வரான பாலருவாயனென்னும் ஆளுடைய பிள்ளையாராகிய ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முருக நாயனார் இவர்கள் சிவப்பிரகாச பரஞ்ஜோதியுட் கூடப் பெற்றதும், மேற்படி நால்வரி லொருவராகிய திருநாவுக்கரசுக ளென்னும் அடபாசுவாமிகள் பிரம்மசொரூப பிந்து நாத ஸ்தாபன வடிவாகிய சிவலிங்கத்திற் சேரப் பெற்றதும், வடதிசைப் பாலனாகிய குபேரனுடைய அம்சமாய்க் காவிரிப்பூம்பட்டின வைசிய கோத்திரத்திற் றோன்றிய திருவெண்காட்டடிகளாகிய பட்டினத்துப் பிள்ளையார் தமது திருமேனியைச் சிவலிங்கமாக நிறுத்தப் பெற்றதும் உருவருவச்சித்தியாகும்

இவ்வித சித்திகளின்றி ஸ்தூலமானது கீழே விழப் பெற்ற ஜீவனக ளெவையானாலும், அவை முக்தி பெறவில்லை யென்று திட்டமா யறியத் தக்கது. எனனை யேல், ஸ்தூலத்தை விடுத்து சூக்கும்மும் சூக்குமத்தை விடுத்து ஸ்தூலமும் வினைத்திட்பத்தினமேல் தனியே நிலை நில்லாததாலும், பிரகிருதியின் ரஜோகுண அவித்தையைக் காரணசரீரமாகவுள்ள ஜீவான்மாவானது முதலிற்சூக்கும உடம்பையும் பின்பு ஸ்தூலவுடம்பையும் முறையே யெடுத்துக்கொண்டு துறந்து மீட்டும் அதனில் அதைக் களைந்து *விதேக கைவல்யத்தில் நிலைக்க வேண்டியிருப்பதாலும், புதிய வுணவை யுண்பதற்காகப் பழைய வுணவை மலமாக்கிக் கழிப்பது போலப் பிறிதொரு நவீனஸ்தூலத்தைப் பெறுவதற்காக இருந்த ஸ்தூலத்தைப் பிணமாகக் கழிப்பதாலும், வினையா லெடுத்த ஸ்தூலமானது மேலும் வினையிருந்தா லகலுமே யன்றி மற்றப்படி யகலாது பிராரத்வித திரய மொழிந்ததே முத்தி யெனுஞ் சுருதிப் பிரமாணமுள்ளதாலும் உணரியப் பெறக்கூடிய பிறவா

---

*விதேக கைவல்ய மென்பது தேகமில்லாத அருவசித்தி யென்கிற பரமமுக்தி.

முத்தி செத்தவர்க்கு இல்லை யெனல் நீக்க முன்றே. இவ்விதம் முடிபும், அநுபவமும், உள்ளது உள்ளபடியாயுள்ள **அநாதி சிவசமய**மாகிய உட்சமயங்களிற் பெரும்பாலுங் காணப்பட்டிருந்தேயானா, அவைக ளச்சமயங்களிலும் விசேஷமென்று வேத வேதாந்திகளும் ஒப்புக் கொண்ட துல்லைமை பெறப்படும். இந்தச் சமயத்துக்குச் சாத்தியமாகிய சிவமெய்ஞ்ஞானம் உடாங்க சாங்க அங்கங்களும், ஆகம நெறி வழிபாடுகளும் ஜீவர்களுடைய நிஷ்காம்ய மோக்ஷத்துக்குரிய சாதனங்களாகவே யிருக்கின்றன. ஏனையவைக ளப்படியன்று.

வலத்திய முத்தியிலக்கணப் பிரமாணத்திற்கு அடியிற் கூறும் யாப்புகளை ஈண்டு கவனிக்க வேண்டும்.

**ஸ்ரீ குமாரதேவ ரருளிய சுத்தசாதகம்**
**௨௧-௨௨-௨௩-௨௪-௨௫-௨௬-**
**௨௭-௨௮-௨௯-௩0-௩௧-**
**௩௨-வது யாப்புகள்.**

"* சுத்தமாய நின்று விச்சை சுத்தியதாந்
தொல்லதிட் டானமாய் நின்றுஞ்
சித்தமா ஞானஞ் சுத்திய தாகுஞ்
சிவதத்துவ கங்கமாய் நின்றன்
மத்தமாங் கிரியை சுத்திய தாகும்
வகுத்தவிம் மூன்றுமற் றொழுங்கிற்
சித்தமாயச் சுத்தி யிலாவிடின் வீட்டுந்
தேகமொன் றெடுக்குமென் றுணர்வாய

"தொம்பதம் விளங்கின் மேல்வினை மறைந்து
தொல்லிரு வினைகன்றுபோ மொளிக்கும்

சுத்தமொற்று கூடஸ்த சொரூபம். காரணமு மென்டா.

தற்பத மான தற்பதம் விளங்கிற்
சஞ்சித மாயைபோ யொளிகரும்
அம்பத மான வசிபதம் விளங்கி
லருமபிரா ரத்தமபோ யொளிக்குஞ்
செம்பர வருளே வடிவதா யான்மாச்
சிவத்தினுக கங்கமாய் நிகழும்."

"அடுத்தமற் றிரண்டு சனனத்தில வீட்டை
யடைந்திடுந் தொம்பத நெறியோ
ரடுத்தமற் றொருநற் சனனத்தில வீட்டை
யடைந்திடுந் தற்பத நெறியோ
ரடுத்த விச்சனனந் தனிலடைந் திடும்வீ
டசிபத நெறியனோ ரிவரும்
அடுத்தநவிவ் வுடலோ டடைந்திடா விடினமே
லாகவகையொன் றெடுக்குமென் றுணர்வாய்."

"ஒடுங்கிடுங் காலந் தோன்றினை வடை வி
னொடுங்கிடு மெனறுணாப பதனு
லொடுங்கிடு காலஞ் *சத்திய வாதிக
ளொடுங்குமிவ் வுடறன்மாத திறையி
னொடுங்கிடுங் கால மசத்திய வாதிக
கொடுங்குமிவ் வுடலசத் தியமா
லொடுங்கிடுங் காலமிவ் வுடலிங்கே வீழ்ந்தா
லொடுங்கின திலலையென் றுணர்வாய"

மேலொரு வடிவை யெடுத்ததே யாயின்
மேவுமிவ் வுடலிங்கே வீழும்

---

* சத்தியவாதி சைவசித்தாந்த பக்ஷத்தார்.

மேலொரு வடிவை யெடுத்ததின் றுயிரின்
மேவுமிவ் வுடலிங்கே வீழா
மேலொரு சிவத்தைச் சீவன்சென் றணைய
மேவுமிவ் வுடலிங்கு தானே
மேலொரு சிவத்தின் வடிவதா மருளாய்
வெளியதா யுலகுகண் டிடவே"

"சூக்கும மதனி னின்றுமுன் வினையிற்
றூலதே கமுமுள தாகும்
சூக்குமந் தனது காரண மனை யிற்
றூலமுஞ் சூக்குமத் தடையும
சூக்குமந் தனது காரண மனை யத
தூலமிங் ககன்றதே யென்று
சூக்குமந் தனது காரணம விடுத்துத
தூலமொன் றெடுத்ததென் றுணர்வாய்

"தூலவிவ் வுடலை விடுத்துநிம லாது
சூக்குமஞ் சூக்குமம விடுத்துத்
தூலநில லாதி திரணையும் விடுத்துத்
தொலலுயிர் நிலாவுயிர் விடுத்துத
தூலசூக குமபக ணின்றிடா துயரும்
சூக்கும முமமுடி வடைந்தாற
றூலமு முடிவை யடைந்திடா திந்தத
தொல்லுல கினிலவிழுந் திடுமோ"

"வினையினி லெடுத்த விவ்வுடல் மேலும்
வினையுள தெனிலிங்கே யகலும
வினையில தெனிலிங் கிவ்வுட றானே
வினையறு மோமயு மாகி

வினையுள வுடலபோற் றோற்றன்மாத் திரமாய்
விளங்கியே வெந்துறு புரிபோல்
வினையிலாப் பரம முத்தியில் வெளியாய்
விமலநல லருளதாய் விடுமே"

"சீவசிற் றறிவு மிம்முத்த வறிவாய்த்
திகழ்ந்திடி னுடன்மருள வடிவும்
தாவறு மோயகா ரவடி வாகும்
தக்கசீ வன்முத்த வறிவும்
மேவரும் பரமுத்த மாவறி வாகில்
விளங்குமோய காரவவ் வடிவும
ஓவவி லந்த வருளவடி வாகு
மொழுங்கிதே யென்றுணர்ந் திடுவாய"

"பிராரத்த முடனபா லின்மிறந்த மெநறியும
பேசிடு மிநமெநறி யதறகுப
பிராரதத முனை போர ருசுகோ யன்றும்
பிராரததம புசிததிடு வோர்கட்
கருதிந்த மாயா தனுகர ணாதுக
ளாதனிற சிவததுவை மதனை
யுறுதுமத் மவைாச சீவனமுத தாமெனன்
றுணர்த்திடப படுமெதுப் படியோ"

"அன்னைதன் முலைப்பா லருந்திடும் பருவ
மகன்றப்பாற் பருவமாக் தகற்பினை
அன்னைதன் முலைப்பா லருந்தவேண டிடினு
மம்முலை வறுறியே யிடுமபோற
பின்னையின் போகம் புசித்திடும பருவப்
பெயர்ந்தப்பாற பருவமாங் தகற்பினை

பின்னையின் போகம் புசிக்கவேண் டிடினும்
பிராரத்த நீங்கியே விடுமால".

"இந்நல லொழுங்கினின் முன்னிரு பதமு
மெய்தியிவ் வசிட்டத் தடைந்தாற்
பந்தமில் சிவத்தை வடிவொடு மடையும்
பகுத்தலை யொன்றிலொன் றொதுங்கி
சந்ததந் தருக்கி யசிபதத் தருத்தந்
தனைத்தத்தம் பதத்தினி னொடுக்கும்
அந்தகர் தமக்கு மற்றொருக காலு
மசிபத முத்தியே கிடையா"

ஆனால், சுந்தரமூர்த்திநாயனார் சொன்ன திருத்தொண்டத்தொகையிலுள்ள மெய்ப்பொருணாயனார் ஏனாதிநாயனார் முதலியவர்களும் திருவள்ளுவநாயனாரும் ஸ்தூலத்தை மண்மேல் வீழ்த்தி விட்டதாகவும் வெளியாகின்றது. அதுபற்றி, கூடுவிட்டுக் கூடுபாயுஞ் சித்தி யொன்றிருப்பதால் திருவருட்படி பிறிதொரு சுத்ததேகத்து ணுழைந்து சென்றதாக ஊகிக்கப்படுகிறது. கூடுவிட்டுக் கூடுபாயுஞ் சித்திக்குத் திருத்தொண்டர் புராணத்திலுள்ள திருமூல நாயனார் சரித்திரங் கரியாகும்.

யோகசித்தியால் பிரம்மரந்திரத்தில் அடங்கியபின் சமாதிக் குழிக்குள் வைக்கப்பட்டவரும் உயிரோடு சமாதிக் குழிக்குள்ளே யிருக்க மூடப்பட்டவரும் எக்காலத்திலேனும் வெளிப்படக் கூடியவர்களென்றும், யோகத்திற் கபாலந் திறந்தேகினோர் வேறொரு சுத்தவடிவஞ் சேர்ந்தாரென்றும் அறிக. ஸ்ரீ பரமபதியுடைய கைலாயத்துக்குப் போக்குவரவுள்ள சிவபதிகளாகிய முனீஸ்வரானையும் என்றும் ஜீவன்முக்தர்களெனவு மெண்ணுக.

காய கற்பங்களைச் சாதித்துப் பலப்படுத்திய ஸ்தூல தேகமும் ஒரவதாரம் அழியவேயழியும். ஆதலால், அப்ப

டிப்பலப்பட்ட ஸ்தூலத்தைச் சூக்ஷுமத்திற் கரைப்பதற்காகப் பிராணபர்தன அடையோகமாவது ஞான சிவ ராஜயோகமாவது கூடி பிரணவலியம்பும் அருளமிழ்தண்ணில் ஸ்தூலங் கரைந்து மஹா லாவண்யமான காந்தி வீசி நின்று மருள் வடிவோர சண்ணுக்குக் காணாது மறைந்துலவத்தகும். இதை ஜீவன்முக்திவடி வென்றும், சூக்ஷுமவுடம்பென்றும், தேகவுடமபென்றுஞ் சொல்லப்படும். இதவும் ஜனன மரணத்திற குடன்பட்த தக்கதன்று.

இவ்விதமுக்தி சித்தி வுருவங்களைத் தவக் குறைவாற பெறு துடம்பிழந்த ஜீவாத்மாவும் சுவாககாதி போகங்களை யனுபவித்து அவசியம் இரண்டொரு ஜென்மத்தில் எந்தப்பிறப்பா யிருந்தாலும் அரிய விதேககைவல்ய முக்தியை அடையத்தகும். விதேகமுக்தி யிலக்கண மிவ்வாறிருக்க ஜீவன்முக்திக்குப்பின் ஸதூலமுதலாக விடுத்து எய்துவதே அம்முக்தியென்று சிலா ஆத்தம் பண்ணிக் கொள்வது தப்பாகும.

மேற் சொற்ற தவகத்துறைக்குப் பலித்தும்
பல னுண்மையெனற்குச் சான்று.
ஞானவாசிட்டம் நிருவாணப் பிராகரணம்
௩.எ-வது செய்யுள்.

"முதலும் யோக பூமியிலே
முளைக்குமி ரண்டா வதின்மலரும்
திதையு மூன்று வதிற்பலிக்கும்
தனியா ரியனும் திறமியோகி
யிதனி லிறந்தா னெடுங்கால
மிருந்து சுத்த சங்கற்பத்
துதவு போகங் களையருந்தி
யோகி யாய்மீண் டுற்பவிப்பான்."

ஆதலால், வஸது ஞானசாதகத்தில் ஜீவாக ளிருக்க வென்றே அறிஞர்கள் முயற்சிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

மேலே சுத்ததேகம், ஸ்வாணதேகம் பிரணவதேக மென்று பேசிய அந்த ஒரே தேகத்திற்கு ஔவுரு வென்றும் பெயர். அதுபற்றி இம்பர் குயிற்றுவ தென்னை யெனில், ஜீவனானது முதலில் இருளுரு வாகி மூடமாய்ச் சிலது நாளிருக்கும். உ-வது மருளுரு வாகிச் சிலது நாளிருக்கும். ௩-வது ஔவுரு வாகிச் சிலது நாளிருக்கும். பின்னர் புராதனம் போலாம். அதாவது ஜலம் உப்பாகி மீட்டும் அந்த ஜலம் அதிற் கலக்க அவ்வித மாவது போன்றும். ஜீவன இருளி லிருக்குங்கால், அதனுருவும் இருளாம். மருளி லிருக்குங்கால், உருவும் மருளாம். ஔவி லிருக்குங்கால், உருவும் ஔவாம். அருளி லிருக்குங்கால் உருவும் அருளாம். இருளுருவம் மருளுருவின மறையும். மருளுருவம் ஔவுருவின்மறையும், ஔவுருவம் அருளுருவின் மறையும். அருளுருவானது முன்போற் சிவசத்தியாய்த் திகழும். இருளுயிர் பசுவாகவும், மருளுயிர் ஜீவனாகவும், ஔவுயிர் ஜீவன்முக்தனாகவும், அருளுயிர் பரமமுத்தனாகவு மிருக்கும். ஒரு ஜீவன் இவ் விலக்கணங்களைப் பொருந்த அவ்விலக்கணங்களாக விளங்கும். இருளாக திகழுங்கால் பதியாகவும், மருளாக திகழுங்கால் பரமாகவும், பிரணவமாய் திகழுங்கால், சிவலிங்கமாகவும், அருளாக திகழுங்கால் சிவமாகவும் ஜீவனிற் சிவம் திகழும்.

**மருளுருவம்** : இராஜத, தாமத, சாத்விக மெனு முக்குண வியல்புடனும் பிருதிவியாதி பூதக் குறிகளுடனு மொன்று யிருக்கும்.

**ஔவுருவம்** : அம்-உம்-மம் என்ற பிரணவ இயல்புடனும், ந-ம-சி-வ-ய எனு மைந்து குறிகளுடனு மொன்று யிருக்கும்.

அருளுருவம் சத்து சித்து ஆநந்தமென்ற இயல்புடனும், இச்சை கிரியை ஞானம் திரோதை பரையென்ற ஐந்து குறிகளுடனு மொன்று யிருக்கும்.

மருளாகிய மாயை வடிவே உருவம். இதற் குணவு: பிரத்தியக்ஷம். ஓவடிவே உருவருவம். இதற் குணவு: உள்ளத்தில் உருசை மாத்திரம். அருள் வடிவே அருவம். இதற் குணவு திருப்திமாத்திரம். உருவ வுணவு ஜீவர்கட்கும், உருவருவ வுணவு ஜீவன் முக்தாகட்கும், அருவ வுணவு பரமமுக்தாகட்கும் உரித்தாம். அந்தர்த வுணவு, அந்தந்த மயமேயாம். உருவ வுணவாற் புஷ்டிக்கும் தேகம் அவ்வுணவுபோ லழியும். அருவவுணவின் றேக மழியா.

அன்னிய வுயிரின் மாம்சத்தை யருந்துதல் அறிவுறு மானிடாகட்கே யடாது. அவ்விதமா யருந்துவா மிருகாதிகளென றெண்ணப்படுவார். மேற் கிளத்திய ஜீவன்முக்தர், பரமமுக்தராகிய விதேகமுக்தர் என்ற சிவாங்கிசாகளும் வன்னெஞ்சுடைய மனிதருண்ணும் பிராணிகளின் மாம்சவுணவை யுண்பதில்லை. அப்படி யுண்ணின் மாயாசகித ஜீவாக ளாவாாகள். புலாலை யுண்டாாக்குப் புலையரெனப் பெயரளித்த அசுத்த வுணவுகளாற் சுத்தாவஸ்தை யுண்டாகாது. ஆகுமு, சுத்தபாவனை திரட்படு மேற் கூடும்.

காப்பாசயத்திருந்த குழவிக்குத் தாயருந்திய வுணவின் சத்தால யாக்கை பொறி மனம் எனபவை சிறிது வளாந்து பினபு புசிபபு மிகுந்ததின்மேல் அப்புசிப்புகள் பிரபஞ்ச விஷயாநந்தத்தி லதிகரித்து முழலச்செய்தன. பிறகு பெண் பிணவின பலத்துக்காப்ப பலவித சத்துக்களை யுணடு அவைதயும் விருத்திப்புதள. இக்காரணங்களால், உண்ணுமுணவால் முக்குண விகற்பமும் விருத்தி பாவதை யறியலாம். அவற்றுள சாத்விக குணமேக்குர்

னமுள்ள சுத்தாவஸ்தையைத் தரும். உணவைச் சிறுத்துண்ணின் விஷயவாசனைகள் சிறுத்துச் சுத்தாவஸ்தை பெருக்கும். பெருத்துண்ணின் அது சிறுப்பசும். அல்லாமல் மயக்கமும், விந்தும், வியாதியும், உறக்கமு மிகும். மயக்க மிகுதலினால் ஆசனத்தின்கட் செவ்வே யிருத்தல்கூடா. விந்துமிகுதலினால் மனத்தின்கட் காமமோங்கி அம்மனம் ஆசைவற நில்லா. வியாதி மிகுதலினால் சமாதி கூடத் தொடங்கவே கூடா. உறக்க மிகுதலினும் கேவலம் வந்தடையும்.

ஒரு *சேர அரிசிக் குட்பட்ட சாதமே யுண்ண வேண்டும். பசுவின் பாலை யுண்டு கொண்டு வருவதாயினுஞ் சாத்விக குணமுண்டாம். கடினமும் உறைப்புமுள்ள பதார்த்தங்களெல்லாம் இராஜத குணமாம்.

காலையிலுண்ணுந் தமோகுணப் புசிப்பாகிய பழய சித்தத்தையும் மாலையிலுண்ணும் இராஜோகுணப் புசிப்பையுந் தள்ளி உச்சிக்காலத்திலுண்ணுஞ் சத்துவ குணப் புசிப்பே சுத்தாவஸ்தையைத் தரும். இடம் பொருள் ஏவ லில்லாதார் உச்சிக்காலத்தில் வெளிப்பட்டுக் கைப்பிச்சை வாங்கிப் புசிக்கத் தக்கது. லவணத்தையும் புளியையும் நீக்குக. ஆகவே யிடத்திருச் சமுதருக்கும் வரை அன்னம் புசிக்குக. உள்ளுக்குள் ஓரிடத்தில் மனசை வைக்க வேண்டியதாயுள்ள முதலிற சவிகற்பமும், பின்பு நிர்விகற்பமுமான நிஷ்டையைக் கூடுக. அகன்றதுந் தோன்றாமலுந் தோன்றியதுங் காணாமலு மிருக்குக.

சகஜ நிஷ்டையிற்றானே இடையறாதுறும் அருள்வடிவமுதத்தை அருள்வடிவாதமா புசித்து அதுவும் ஜீவனும் மெல்லக் கரைந்து சிவாங்கிச மாகும். அதுவே யருள் வடிவு.

---

*சேர் - மெதுசா நெல்லெடை.

மருள் வடிவாத்மா இருக்கு மிடமும் புசிப்பும் மருளா யிருக்கும். அருள் வடிவாத்மா இருக்கு மிடமும் புசிப்பும் அருளா யிருக்கும். அருளொளியில் இச்சையுதிக்கில் மனம் அசைவற நிற்கும். அருளொளியில் ஞான முதிக்கில் உலகம் அருளாய்த் தோன்றும். அருளொளியில் கிரியை யுதிக்கில் உளத்தி லருளமிழ் தூறும். இருளவஸ்தையில் எங்கு மிருளா யிருந்து புளுகம் விழித்திடல் போல அருளவஸ்தையிலும் எங்கும் அருளாயிருந்து புளுகம் விழிக்கத்தகும். இருளவஸ்தை தாமதத்தாலுண்டாகி ராஜதத்தால் விழிக்கும். அருளவஸ்தை சாத்விகத்தாலுண்டாகி சாத்விககுண ராஜதத்தால் விழிக்கும். மருளை யடைந்தபின் இருளவஸ்தை வருவதில்லை. அவ்விதம் வருதல் மருளின் தாமதகுண மாதலால் போக்கும் வரவு மாயிருக்கும். அதன்மேல் அருளவஸ்தையை யடைந்தால், மருளவஸ்தை வருவதேயின்று. வரின் அருளல்லாத மருளின் சாத்விக குணமென்றெண்ணுக. இருளவஸ்தையை யேனும் அருளவஸ்தையை யேனும் பொருந்தினும் மருளினுற வடிவம் நில்லா.

சத்துவகுண விருத்தியாலேயே நிஷ்டைலபிக்கும். இல தேற் சகல கேவலப்பட்டு மருளாயிருக்கும். அந்தச் சத்துவகுணச் சுத்தாவஸ்தையைப் பொருந்தினலன்றி ஜீவனது முக்தியும்பெறு. ஜீவன்முக்தன் அன்னம்புசிப்பதென்பதில்லை? ஆனல் ஜீவாக ருபசரித்துப் புசிக்கவென்றளிப்ப தெவ்வளவாறாலும் அவ்வளவையும் உண்பன். அவை சமித்ததாகவாவது, மலமானதாகவாவது இரா.

பெந்ததிசையின்மேல் அருள்வடிவாகி எங்குமாய்க் காண்பதுபோன்று முக்திதிசையிலுமாம். அருள்வடிவு திவக்கிலும் ஈக்ஷணத்திலும் அகப்படாதிலகும். மருள் வடிவு அகப்பட்டிலகும். ஓ வ்வடிவு ஈக்ஷணத்திற்கு மட்டுந் தென்பட்டிலகும். அந்தலங்கார வடிவுடைய ஜீவன்முக்து

ஞானவன்,—ஒருவனை ஈக்ஷணித்த பொருளைக் கனவிற் கண்டு பொய்யென்றிருத்தலையை உலகத்தைக் காக்ஷி மாத்திரமாய்க் காண்பதன்றி விவகார பீடிதனாகான். கனவு காண்கையில் இதுவனவென் றெண்ணார், சொற்பன ஜாக்ர மத்யத்தி லிருந்து பார்த்த தனைய அருளுக்கு மருளுக்கு நடுவே பிரணவ வடிவான ஜீவன்முக்தன் ஜெகமுஞ் சிவமுங் காண்க விளங்குவான். காக்ஷிக்கக் கூடிய இவனுடைய வடிவம் வறுத்த விதைபோலும், இந்த்ர தனுசுபோலும், கானல் ஜலம்போலும் தோன்றித் தோன்றும விகழும். அன்றி மண்ணாற் றடுக்கவாவது, புனலா லனைக்கவாவது, கனலாற் றஹிக்கவாவது, காற்று லசைக்க வாவது கூடாததாயிருக்கும். யாதொரு துர்வாசனையும் வாசியா. துர்வாசனையை மேலே திமிரிலும் வீசா. இவ் வுடம்புடையோர மூவ்வுலகும் முக்காலமு மோர்ந்து விபுதர்கட்கு மேலாய் உவமான ரஹிதராய், மூஞ்சுடாபோலுஞ் சுத்தாங்கராய், பிரணவ வமுதைப் புசிப்பவராய், அமுதங் கிட்டும்வரை சமயிக ளுபசரித் தளிப்பனவற்றை யுண்பவராய், அந்நிய சப்தமும், அந்நிய ரூபமும், அந்நிய பரிசமும், அந்நிய ரசமும், அந்நிய வாசனையும், அந்நிய நினைவும், அந்நிய நேசமும், அந்நிய இடமும், அந்நியர்கையி லேற்பது மிடுவதும், அந்நிய கிரியைகளு மின்றி மானிடவுருவாய் ஜீவர்கட் கனுக்ரகிக்கும் பொருட்டுச் சின்னாளிருந்து பின்பு சிவாத்வித பரம முக்தியை யடைவார்."

ஜீவன் முக்தித்தன்மை பெறுப் பெத்தனுக்கு மனம் உருவ மாகவும், அம்முக்தனுக்கு மனம் அருவ மாகவும், பரம முக்தனுக்கு அவ் விரண்டு மில்லாமலு மிருக்கும்.

பல வஸ்துக்களி னினைப்பே மனதுக்கு உருவம். அதுவே மாயாரூபம். அம் மனம் விஷயாதிகளைக் கைக்கொண்டிருப்பது அசுத்தவாசனை. இதினாலேயே சரா மரண

னனை யுண்டாம். இந்த வாசனை யறுதலாகிய வாசனையுடைய யுண்டாகி சுத்தவாசனை யென்கிற பிர்ம்ம வாசனை பிரசன்ன மாவதே ஆத்ம சுவாநந்தமான ஜீவன்முக்தியை அடைகும்.

இன்ப துன்பங்களில் அணுப் பரிமாணமேனு மசைவின்றிச் சுத்தவாசனையைப் பெற்றிருப்பதே மனத்தினுருவ நாசம். அதுவே மாயாநாசம்.

முதலின் மடிந்த இராஜத தாமதத்துடன் சாத்விகமு மிறப்பதே மனத்தி னருவநாசம். இதுவே பரமமுக்தி.

## ஞானசிவராஜயோகங்கூடுதற் குபாயம்.

இன்னனை முக்தி யிலக்கணத்திற்கான ஞானசிவராஜ யோகம் எவ்வாறு கூடுமென்னில், மனமும் அதின் வாசனையும் வித்தும் முளையு மென்கிற பீஜாங்குர நியாயமாயிருந்துகொண்டிருக்கிறது. அதனால், மனதை நசித்தால் வாசனையும், வாசனையை நசித்தால் மனமும், தழைக்காதென்று நிச்சயப்படி ஐம்பொறிகளாலான மோகமயமாகிய திரிசியவிச்சை நீங்கினுன் மனமடங்கும். அவ்வவதரம் கன்றைப் பிடிக்கப் பசுவானது பாச பந்தத்தாலகப்பட்டுக் கொள்ளல்போன் மனத்துடன கலந்தெழுந்த பிராணவாயு முள்ளடங்கும். அதுவே ஞான சிவராஜ யோகம். இதற்கான சமாதிமுறை மார்க்க மெப்படியென்னில்

## சமாதி.

சைவ தவத்தோனுயின் சுத்த தவளமான பவித்ர விபூதியை உத்தூளனமா யணிந்து நல்லவிடத்தில் அதாவது: மூலச்சார்பு குளிர்ந்தஅடவி நன்னீர்க்கரை பார்வைக்கினிமையான விடம் இவைகளில் நடப்பன பறப்பனவைகளின் சப்தமொன்றுங் கேளாமல் எவ்வகைத்தானகடிவாய் ஜெந்துக்களு கடமாடாமல் இருப்பிடத்திலிருந்து

MAHAMAHOPADHYAYA
... U.V. SWAMINATHA IYER LIBRARY

கரமுக ளில்லாமல் நலமுறு கிருஷ்ணாஜனமேனும் வியாக்ர மாசன மேனும் அல்லது மிருதுவான ஆசனம் ஏதேனும் விரித்துள்ள சமதலத்தி லிருந்து, முதுகுக்கும் உபய விலாவுக்கும் தழுவணை சேர்த்து அல்லது இயைந்த யோக தண்டம் யோகப்பட்டை யென்பனவற்று ளொதையே னும்பூட்டி, பத்மாசனம் அல்லது சுகாசனத்தில் அசை வற மாறாபு கண்டம் தலை மூன்றும் மறறப் பாகங்கட்குச் சரியா யிருக்க நிமிர்ந்திருந்து, மனதுடன் இந்திரியங்களை யும் அசங்கமாய்ச் சோத்துக் கொஞ்ச நேரம் எண்ணமற றிருக்க வேண்டும்.

இப்படி மனோவசியஞ் செய்த பின்பு, அம்மனதைப் பெரிய பாகத்தில் ஒரு சிறியபாகம், அதுவுந் தனகுண ரச் சக்தி யில்லையென்றும், அஃது பிரம்மரந்தர மத்தி யத்தி லிருக்கிறதென்றுந் தீர்மானித்துக்கொண்டு, அதி னுடைய திருஷ்டியே மேலேயிருந்து கீழே குண்டலினிய மூலாதாரத்திற் பாாக்கிறதாய் காலை மாலை உ௦ - நாழி கைக்குக் குறையாமல் ரு-நாழிகைநேரம் வரை பரீட்சிக் குக அவ்வணம் அழுத்தமாய் நோக்கிப் பரீட்சித்துப் பலப்படுத்துக

இப்பரீட்சையால் வெளி வேலைகளினும் மனம் அசை வற நிவாத தீபம்போ லிறகுந் தரமாம். இதறகு நிஷ் சலன மனோஸ்வய ஸ்திதி என்று பெயா.

மேலே பத்மாசனமென்றது:— இருதாள்களையுஞ் சம் பளமாய்ச் சோதது முழந்தாள்களின்மேல் இரு ஹஸ்த புறஸதலமும் படியவைதது அங்குலி விரிதது சிரமுத திரைபிடித்து நிமிாந்திருப்பதாம்.

மேற் பகர்ந்த நிஷ்சலன மனோஸ்வய ஸதிதி வந்தபின மேல் உவளக நேத்ரங்களின் உண்மையான, உள் திருஷ டியை உள்ளுக்குள்ளே குண்டலிக் கிறக்கிறதாகவும் மேலே பிரம்மரந்தரத்துக் கேற்றுகிற தாகவும் அப்பியா

க்க வேண்டும். அப்படி யப்பியாசிப்பதில் நாம்நுப லக்ஷண திருஷ்டி என்றிரண்டுக்கும் பெயர். பிறவும் சுத்தசைதன்ய க்ஞானவியாபக சந்த்ரகலாவாசி கல்ப சித்த ஆத்மதிருஷ்டி என்று (க) இடது பக்கத்துக்கும், சுத்தசைதன்ய க்ஞானசாக்ஷி சூரிய கலாவாசி உஷ்ண வுக்ர ஹிருதயபுத்தி ஆத்மதிருஷ்டி என்று (ங) வலதுபக்கத்துக்கும், நடுவேயுள்ள (உ) திருஷடிக்கு சுத்தசைதன்ய ஞானநந்த அக்னி கலாவாசி அகோரப்பிரகாச அகங்கார மனோ ஆத்மதிருஷ்டி என்றும் பெயர். முன்னம் க - உ - ங-இலக்கமிட்டுக் காட்டிய நாடிகளின் றன்மை இவைகளேயாம்.

பாகிய கயிங்கரியங்களில் மனோ திருஷடியிற் பாதியைச் சுழிமுனையிடமாய் வேலை செய்ய வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அர்த்த விவகார திருஷ்டி என்று பெயர். பிறிதொரு பாதியைக் கும்பக வாசியிடம் பரிசு முதலிய தில்லாமன் மௌனமாய் வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அர்த்த மனோலய திருஷ்டி என்று பெயர். இப்படிக் கொஞ்ச மாசஞ் செய்யத்தக்கது. அதாவது.— ஆத்த மனோலய திருஷடி திடப்படும் வரை இதின் முற்பாதி பிற்பாதி கலக்குமானால் வேறு வேறு பிரிதது யதாாத்தத்தில் வைத்து உறுதிப் படுத்தவேண்டும். எவ்வணமேல், காம காரியங்களில் மன நோக்கு மவதரம் "வினையெது செய்யினு மன நினையாய் நில்" என்றபடி உண்ணோக்காய் நோக்காமல் கும்பகத்திலான பாதியும் பிர்ம்மரந்தரத்திலேயே தாரகமா யிருக்க வெளி நோக்காய் நோக்கவேண்டும்.

இதன்மேல் சிலாக்யமான ஞான சிவராஜ யோக மெய்தும். எவ்வண மெய்துமேல், நாடோறும் ஓா இரசித்துறி தனித்து காலை மாலை ஏழு-நாழிகை நேரத்துக்குக் குன்றாமல் ஒவ்வொருதடவையும் உட்கார்ந்து

அடியில் விவரித்தபடி சகஜஞ் செய்தா லெய்தும். படுத்துக் கொண்டாவது நின்றுகொண்டாவது நடந்து கொண்டாவது செய்யத்தகா. சகஜஞ்செய்து வருங்கால் இரவில் ௧௨ - நாழிகைமுதல் ௨௫ - நாழிகைவரை மெதுவா யுறங்கிக் கொள்ளலாம். பல வகைத்தான தபக் கொள்கையி னின்றும் இந்த **யோகம்** சிலாக்ய மெனற்கு;

### இஞ்ஞான்று பிரமாணம்.

### பஞ்சாக்ஷரப் பதிபசுபாச விளக்கம் ௩௫ - வது செய்யுள்.

"அரியவிம் மானிட யாக்கை பெற்றவர்
கருமயோ கங்களாற் காலந் தள்ளுவார்
உரிய மெய்ஞ் ஞானயோ கத்தி லுலரன்
௨ துரியஞா னத்தினைச் சோதி யார்களே."

### சிவபுண்ணியத்தெளிவு ௮௩ - ௮௬ - வது யாப்புகள்.

"முந்நூற் சடங்கு முடியா தோன்
முடித்தோன் வேத முழுதுணர்ந்தோன்
றன்னேர் வன்னி கோத்திரியெச்
சாவான் சத்திரயாகி
யிந்நூற் புகழ்வே தாந்தியிவ
ரிசைத்த முறையா யிரமதிகர்
தொன்னூல் வேதச் சிரப்பொருண் முத்
துரிய மகவாக் கியமதனின்."

"மதித்த தத்து வமசியந்நு
வயவாக் கியத்தின் வாய்மைதன்னை
விரித்த விஞ்சை யார்கோடி
மறையோர் மேலாம் பசுபதிமுன்

[illegible]துதித்த வோசைச் சிவா[illegible]
[illegible] கருதும் * பொருண்மூன் றுணர்[illegible]
[illegible]பரம சிவனருளும்
[illegible]ஞ் சிவயோ கிக்கிணையோ.

[illegible]வனை யறிதற்குந் தன்னை யறியவேண்டியதும், தன்னையறிதற்கு ஞான நேத்ரங் கிடைக்கவேண்டியது முறையா யிருத்தலினால், அந்த ஞான நேத்ரங் கிடைத்தற்கு இந்த யோகமன்றி வேறெவ்விதத்தாலுங் கூடாதென்று பூர்த்திகரமா யறியவேண்டியதன்றோ.

சகஜஸிவாம்.—எந்த விவகார சிந்தனையும் உள்ளே வராமல் முழு மனதையும் பிரம்ம ரந்தரத்திற் பெருக்கி (கூ) வலக்கண் ணோக்கை சுத்த சைதன்ய ஞானவியாபக ஆத்மசித்த திருஷ்டிப்பிரகாச சொரூபாங்கிசம் எனவும், (க) இடக்கண் ணோக்கை சுத்தசைதன்ய ஞானசாக்ஷி ஆத்மபுத்தி திருஷ்டிப்பிரகாச சொரூபாங்கிசம் எனவும், கo-நிமிஷம் வரை கொண்டு திருஷ்டிப்பிரகாச பாவனை ஞானோபாசன தியானமாக இரண் டிரண்டு நிமிஷம் துவாதச ஸ்தலங்களினு முறையே இறங்கி வரவேண்டும். அப்படி வரும்போழ்து உ) நடுவே ஞான திருஷ்டி தோற்றும். அப்போழுது மூன்றும் பிரம்மரந்தரத்தை யடையும். அவ்வவதரம் மூச்சுந் தானே யடங்கி விடும். இதனால், மனதை யடக்குவதற்காக உள்ளுக்குள் முட்பிரணவ ஜெபத்தோடு இரேசக பூரகஞ் செய்து ஸ்தம்பிக்கும் பிராண பந்தன அடையோகத்தை இங்கே செய்ய வேண்டிய தென்பதில்லை. ஏனெனில், பிராணனின் இயக்கத்தால் பூரண போத மசைந்து மனமாக விளையுந் தன்மை யுளவால் பிராணனைப் பந்திக்கின் மனமும், மனதைப் பந்திக்கிற் பிராணனு மடங்குந் தரமுள்ளது முறியன்றோ.

---

* பொருள் மூன்றென்றது பதி, பசு, பாசம்.

### உதாகாரம்.

### ஞானவாசிட்டம் உபசாந்திப் பிரகரணம்
### ருரு - வது தொடர்பு.

"மிகைவா தனைமாய்ந் திடிற்சித்தந்
தோன்றாப் பவன மொடுங்கிவிடும்
மெறுகைதீர் துகளந் தரத்துண்டோ
சொன்ன பிராண னசைவேது
மிகைவா ருள்ளத் தசைவதுவே
யதனாற் பிராண விசைத்தடைதான்
றகைசேர் மதிமான் களுக்கியல்பாய்த்
தப்பா தியற்றத் தக்கதுவே"

ஒன்றி லுறுதியாய்ச் சித்தநாடுந்தருணம், அத்தோடு பொறி புலன்களும் பிராணவாயுவும் ஒருங்கே கூடிநிற் பந்த ஊகமுடையா ரறிவா.

மேலிரண்டு நோக்குங் குண்டலிக்கு வந்தபோது, தாமசியாமல் அவைகளைக்கொண்டு நடுவிலுள்ள ௩ - வது திருஷடியை இங்ஙகிய பறறுக்குறடுபோற் பிடித்துக் கொள்ளவேண்டும். அந்த ௩ - வது திருஷடிக்கு சுத்த சைதன்ய ஞானநந்த ஆத்மனே திருஷ்டிப் பிரகாச சொருபாங்கிசம் எனப பெயராம். மனோ திருஷடியாகிய இததை ஒரு நேரிய கம்பமெனறும, அதன உச்சி பிரம்மரந்தரததிலும் அடி குண்டலியி லென்றுங் கொள்க அந்தக் குண்டலியில் துவாதச ஸதலங்களையும் பாாகிற திருஷடியும் புவன சராசரஙக ளனைதது மிருககிறதாகக் கொண்டு இருவிழிகளின் பாவரூ ஞானததினாலேயே மேற்படி மனோதிருஷடியைப் பிடிததுககொள்வ தென்றும், இருவிழிகளின கூாமையே பற்றுககுறடென்று மோாக.

அவ்வாறு பிடிததுககொண்ட தன்மேல் மேலேயே றுவ தெவ்வகைத்தென்னில் ;

து[illegible] விவர முதலியன —மனோஞான சொ[illegible] இறங்கிவந்த ஆத்மா ஆத்மஞான சொருபமாய் சஉ-வது தலமாகிய (க) மூலாதாரத்திலுள்ள குண்டலியிற்றானே டாக்க அங்கே பிருதிவி அப்பு வாயு தேயு ஆகாய மென்னும் பூதபஞ்சகந்தோன்றும் அதில் உ-நிமிஷந்தங்கி அந்த பூதாத்மகத்தை நீ யாரென்று விசாரிக்க நானே சஉ-வது பிரம்மமென்னும். அப்போது நீ பிரம்மத்தின் சாயையிலும் பன்னிரண்டாகார் உன்காரியம் அசத்தியமே யென்று சொல்லி அதை ஜெயித்துக்கொள்ளவேண்டும்.

(உ) அதன்மேல், உ-நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் நாபி ஸ்தானத்தைக் குறுகவேண்டியது. அங்கே கொஞ்சநேரம் மௌனஞ் சாதித்து ஆத்மஞான சொரூபமாய்ப் பார்க்க அங்குள்ள இந்திரியாத்மகம் தோன்றும். அதில் உ-நிமிஷந்தங்கி நீ யாரென்று விசாரிக்க நானே கக-வது பிரம்மமென்னும். அதையு முன்னம்போல் நீயல்லவென்று ஜெயித்துக்கொள்ள வேண்டும்

(ங) அதனமேல், உ-நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் ஹிருதய ஸ்தானத்தைக் குறுக வேண்டியது. அங்கேயும் மௌனஞ்சாதித்து ஆத்மஞான சொரூபமாய்ப் பார்க்க அங்குள்ள இராககோசாவஸ்தாத்மகம் தோன்றும். அதில் உ-நிமிஷந்தங்கி நீ யாரென்று விசாரிக்க நானே க[illegible]-வது பிரம்ம மென்னும். அதையு முன்னம்போல் ஜெயித்துக்கொள்ள வேண்டும்.

(ச) அதன்மேல், உ-நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய்க் கண்ட ஸ்தானத்தைக் குறுகவேண்டியது அங்கேயு மௌனஞ் சாதித்து ஆத்மஞான சொரூபமாய்ப் பார்க்க அங்குள்ள அந்தக்கரணாத்மகம் பிரசன்னமாம். அதில் உ-நிமிஷந்தங்கி நீ யாரென்று விசாரிக்க நானே

கூ - வது பிரம்மமென்னும். அதையு முன்னம்போல் ஜெயித்துக்கொள்ளவேண்டும்.

(ரு) அதன்மேல், உ - நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் நாவின் மத்யஸ்தானத்தைக் குறுக வேண்டியது. அங்கேயு மௌனஞ்சாதித்து ஆத்மஞான சொரூபமாய்ப் பாாக்க அங்குள்ள திரிகுணாத்மகம் பிரசன்னமாம். அவன் உ - நிமிஷத்தங்கி நீ யாரொன்று விசாரிக்க நானே அ - வது பிரம்ம மென்னும் அதையு முன்னம் போல் ஜெயித்துக் கொள்ளவேண்டும்

(சா) அதன்மேல், உ - நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் நாசி ஸதானததைக் குறுகவேண்டியது. அங்கேயு மௌனஞ் சாதித்து ஆத்மஞான சொரூபமாய்ப் பாாக்க அங்குள்ள திரிமலாத்மகம் தோன்றும். அவன் உ - நிமிஷதங்கி நீ யாரொன்று விசாரிக்க நானே எ-வது பிரம்ம மென்னும அதையு முனபோல் ஜெயித்துக் கொள்ள வேண்டும்.

(எ) அதனமேல், உ - நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய புருவமத்ய ஸதானததைக குறுகவேண்டியது. அங்கே ரம சாநத மௌனமாய ஆத்மஞான சொரூபமாய்ப் பாாக்க அங்குள்ள பிந்தாத்மகம் தோன்றும். அவன் உ - நிமிஷந்தங்கி நீ யாரொன்று விசாரிக்க நானே கூ - வது பிரமமமெனனும இஃது.— பிரகிருதியின தாமதகுண அக்ஞானததின் ரூமறமாகிப விடசேபம் ஆவாணம் என்ற மாயா சததிகட்குக காரணமுமாம். அதையு முனனமபோல் ஜெயித்துக் கொள்ளவேண்டும்

(அ) அதன்மேல், உ - நிமிஷததில் மனோஞான சொரூபமாய் லலாடமத்ய ஸ்தானத்தைக் குறுகவேண்டியது. அங்கு ப்ரம சாநதலயபோத மௌனமாய் ஆதம ஞான சொரூபமாயப் பார்க்க அங்குள்ள நாதாத்மகம் பிரசன்னமாம். அவன் உ - நிமிஷந்தங்கி நீ யாரொன்று

விசாரிக்க நானே ௫-வது பிரம்மமெனனும். அதையு முன்னும்போல் ஜெயித்துக் கொள்ளவேண்டும்

(௯) அதன்மேல், உ-நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் லலாட மத்ய ஸ்தானத்திற்குஞ் சற்று மேலே குறுக வேண்டியது. அங்ஙன் சாவசாந்த சாவலய போதா ஐக்ய சாவசூன்யாமாதர பந்தன மௌனமாய் ஆத்ம ஞான சொரூபமாய்ப் பார்க்க அங்குள்ள கலாத்மகஞ் பிரசன்னமாம். அவன் உ-நிமிஷந்தங்கி நீ யாரென்று விசாரிக்க நானே ௬-வது பிரம்மமென்னும். இஃது.—ஒரு நேரம் ஒன்றை யிச்சித்தபின் மீண்டு மிச்சியா அறப ஆசையுடைத்து. அதையு முன்னம்போல் ஜெயித்துக் கொள்ள வேண்டும.

(௧0) அதனமேல், உ-நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் மேற்சொன்ன ஸ்தானத்துக்குஞ் சற்று மேலே குறுகவேண்டியது. அஙகு சாவ சாநத சாவலய போதா ஐகய சாவ வியாபகா ருமபித மௌனமாய ஆதம ஞான சொரூபமாயப் பாாகக அஙகுள்ள தத்பராத்மகம் பிரசன்னமாம். அவண உ-நிமிஷந்தங்கி நீ யாரென்று விசாரிக்க நானே ௭-வது பிரமமமெனனும. இஃது.—பிரபஞ்ச வேட்கையிற பொருந்தியும பொருந்தாமலு முளளது. அதையு மேற பணிததபடி ஜெயிததுக கொளளவேண்டும.

(௧௧) அதன்மேல, உ-நிமிஷத்தில் மனோ ஞான சொரூபமாய் பிரம்மரந்தரத்துக்குங் கீழேயுள்ள சிரசு மத்யஸ்தானத்தைக் குறுக வேண்டியது. அங்ஙன சாவ சாநத சாவ லய போதா ஐக்ய சாவசாக்ஷியா மாத்ர ஸதம்பன மௌனமாய் ஆதம ஞான சொரூபமாய்ப் பாாகக அங்குள்ள பராத்மகம் பிரசனனமாம். அங்கு நான்று உ-நிமிஷந்தங்கி நீ யாரொன்று விசாரிக்க நானே உ-வது பிரமமமெனனும் இஃது.—பிரமவஸ்து தானே

அல்லவோ வென்னும் பிராந்தி யுடைதஞ். அத்தையு முன்னம்போல் ஜெயித்துக்கொள்ள வேண்டும்.

(கஉ) அதன்மேல், உ - நிமிஷத்தில் மனோஞான சொரூபமாய் பிரம்ம ரந்தரத்தைக் குறுகவேண்டியது. அங்குள்ள பராத் பராத்மகத்தை ஆத்மஞான சொரூபமாய்த் தரிசித்து திரிபுட அவிதா ஐக்ய ஜீவன் முக்தியானுபவ கைவல்ய மெய்தி உன்னில் நின்றுஞ் சவரூப வித்தியாசமா யிருக்கிற நான் யாரென்று விசாரித்த போது 'நீ' ஜீவாத்மாவாக விருக்கிறாய் பரமாத்மாவாக யோக சமாதியைப் பொருந்தி,

சாவ ரகித சூன்யப் பிரம்மமயமும்,

சாவ ரகித சாவவியாபகப் பிரம்மமயமும்,

சாவ ரகித சாவ சாக்ஷிப் பிரம்மமயமும்,

சாவ ரகித அஞதி நிதய தநோ சதாபிரம்மாநந்த மயமும்,

, ஆகி அதன்மேல் சுத்தப்பிரம்ம மயமாய் விளங்கக் கடவாய்' என்றும் அருளப்படும். அப்படி விளங்குவதே அடியி லதிரகும் பிரம்ம மயலக்ஷணமாகும். மேற்கூறிய வாறு பனனிருதலங்கடோறும் உ-உ-நிமிஷததில் மனோஞான சொரூப லக்ஷணமாய்ச் சென்றும, உ-உ-நிமிஷத்தில் அத்தலங்களிற் றங்கி ஆதமஞான சொரூபலக்ஷணமாய் நோக்கியுமானதில்—.

அஷ்டோத்ர சகஸ்திர கமல துவாதசாந்த சோட சாநத அந்தரமநய உச்சப் பிரமாந்தரத்தில்,

அதிக வறுதியா யிருக்கவேண்டும் பிரம்மரநதரத்தின் மேலதான துவாதசாந்தம் மூடுதலில்லை. பெரும்பர வெளிதான். அங்கேயும் அனநதரமான அனேக பரமரகசியங்க ளுண்டு. அவைகளை யனுபவித தறிந்து கொள்ள லாம்.

இங்ஙனம் விவரணித்த கஉ - தலங்களில் க-உ-ரு-ச-அ - ஆவது தலங்களுடன் க - உ - தலங்களுக்கு நடுவேயுள்ள சுவாதிஷ்டானத்தையுஞ் சேர்த்து ஆறு தலங்களென்றும், அதற்கு மேலே கஉ-வது தலத்தைக் கூட்டி ஏழுதலமென்றுஞ் சுருக்கமாய்ச் சிலர் சொல்வது முண்டு.

இம்மட்டில் முக்தியிலக்கணமும், ஞான சிவராஜ யோகங் கூடுதற் குபாயமும், ஆத்மஞான பரோக்ஷ ஞானானுபவத்திற் கான சமாதி முறை முதலியனவும் மேற் கோளுடன் விவகரித்து முடிபுற விளக்கலாயிற்று. இனி பிரமஞான அபரோக்ஷ ஞானானுபவத்தை விளக்கக் கடவேம்.

---

## உ - வது

## அபரோக்ஷஞானயோகானுபவம்.

மேற் பகர்ந்தபடி உச்சப் பிரம்ம ரந்தரத்தில் உறுதியாய உ-நிமிஷமிருந்த பின்பு, ஒரு நிமிஷத்துக்குள்ளாக அவரோகண தியானஞ் செய்துகொண்டு குண்டலிக் குவந்து, (க) மனோஞான சொரூபலக்ஷணமும், (உ) ஆத்மஞான சொரூபலக்ஷணமும் ஒன்றுபட்டு மந்தரத்தியானமுமாக (ரு) பிரம்மமய லக்ஷணமாய் ஏறியு மிறங்கியு மிருக்கவேண்டும். இப்படிப்பட்ட திருஷ்டியில் மத்ய திருஷ்டி யறுதியாகும். நிராதாரமாதியாய பிரமரந்தரங்களாக ஏனைய ஏகாதச ஸ்தலங்களிலுமுள்ள தத்துவங்களும் ஸ்வயம் ஐக்ய ஸம்பந்த பேர்ந்தாரூடம். மேற்படி தத்துவங்களின் சந்திக்கான மந்திரக்கிரியா வடியில் வனையப்படும். அவைகள் ஏறுமப்பொழுது உள்ளுக்குள்ளேயே ஜெபித்தால் ஐக்ய ஸம்பந்தமாகிற தத்துவங்கள் ஸ்வய ஸ்திதியைப் பொருந்தி முறையே ஒவ்வொன்றொன்றாகமாகி நிற்கும். அப்பொழுது அவைகளைத் தன்னில் வேறல்லவென்று ஐக்யங் கொள்ளவேண்டியது. இதுவே பிரம்மக்ஞான அபரோக்ஷ ஞானானுபவம்.

## தத்துவசுத்தி மந்த்ரம்.

௧. பூதசுத்தி—ஓம் நமசிவாயநமஃ

௨. இந்திரிய சுத்தி—நம்.

௩. இராகத்வேஷ சுத்தி — மம் ஓம் ஆ - ஈ - ஊ - ஏ - ஓ சிவாயநமஃ

௪. அந்தாக்காணசுத்தி—ஓம் சிம் சிவயவசிநமஃ

௫. திரிகுணசுத்தி—வம் சிவய வசிநமஃ

௬. திரிமலசுத்தி—சிவய வசி சிவாயநமஃ

௭. பிந்துமயசுத்தி—ஓம் சிவாய குருவேநமஃ

௮. நாதமயசுத்தி—ஹம் சிவ சிவ போற்றிநமஃ

௯. கலாமயசுத்தி—ஹம் சிவ சிவ சிவா நமஸ்தே நமஸ்து

௰. தத்பரமயசுத்தி — ௨ - சிவ சிவ சிவ சிவா சிவ சிவ சிவ ஐக்யாட்டணம் கரோநமஃ

௧௧. பரமயசுத்தி — ஆ, ஓம் சிவ சிவ பிரம்ம பிரம்ம சிவோஹம் ஏகமேவாத்விதீயம் தத்துவமசியகட.

இந்தப் பரமயசுத்தியிலுள்ள ஆ - என்னும் அக்ஷரத்தை முதலில் ஆ வென்று கொஞ்சநேரம் ஜெபித்திருந்து மற்றதைப் பின்னே செவ்வையாய் ஜெபிக்குக. பின்னிரண்டாவது தரத்தில பிரம்ம பிரம்ம சிவோஹம் சிவோஹம் சிவோஹம் சிவோஹம் என்று சொல்லுக.

"சிவம்" என்கிறபதம் காத்தவ்யம், மங்களகர்ம, பரிசுத்த மோக்ஷம், சாவ வசித்துவம் என்று பொருள்படும்.

## தத்துவசுத்திக்கு இவைகளுமாம்.

| | | | |
|---|---|---|---|
| க. | ஓம் | எ. | ஹம். |
| உ. | ந. | அ. | வ்ஷம். |
| ௩. | ம. | ௯. | க்ஷம். |
| ச | சி. | ௧௦. | ஓ. |
| ௫. | வ. | ௧௧. | ஔ. |
| ௬ | ய. | ௧௨. | ஆ. |

இவ்வளவையுந் தனித்தனி கொஞ்சநேரம் ஜெபித்திருக்குக

உணர்ந்திய அபரோக்ஷஞான யோகானுபவம் மேற்கண்ட பிரகாரம் உறுதியானதின்மேல், விவரித்த இரண்டு திருஷ்டிகளையும் ஏகமாய்ப் பிரம்மரந்தரத்திற் சோக்கத் திரிகோணமாய்க் காணும். மனோஞானதிருஷ்டி நடுவே நிற்கும். அப்பால் மூன்றையும் ஒரே திருஷ்டியாய்க் கொண்டு, சுழிமுனைவாசி நாடிவழியாய்க் கொஞ்சமும் தாமசியாது அதோமுகத்தி லிறங்கும்போது, ஞானாகாச சொரூப (௩) பிரம்மமய லக்ஷணத்தைச் சுத்தப்பிரணவ மந்த்ராமய மௌன நிலையாய் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி மத்யஸ்தானங்களில் தங்கவிடாமல் மூலகுண்டலிக்கு வந்த பின், அங்கேயிருந்து பிறவும் கும்பகவாசி நாடிவழியா யேற்றவேண்டும். அவ்வித மேற்றுவது.—பிரம்மரந்தர சிவசைதன்யத்தை விழுங்கத்தக்க ஒரு சாப்பத்தைப் போல பலமாயேற்றவேண்டும். அதில சைதன்யத்தைச் சாப்பம் விழுங்கிறதாக வாவது, சாப்பத்தைச் சைதன்யம் விழுங்கிறதாகவாவது கூடி பரமாத்மாவாகிய ஒரு ஞானாகாசமாய் போதத்தால் விளங்கி, ஒரு திகிரி ஏறியு மிறங்குவதும்போ லிருக்கத்தகும். இறங்குவதாற் சுத்தியும், ஏறுவதால் லயமுமாம.

இதனமேல், செவி விழி வாய் நாசியையுமுள்ள சிரசையே இல்லாததா யெண்ணுக. அதறகுப பதிலாய **சர்வவியாபித சாக்ஷியாநந்த அந்தர்யாமித்வானுதூத பிரம்மக்ஞான சக்ராகிருதவட்ட திருஷ்டிமயத்**தைச் சோதித்துககொள்க. அஃதே அவயவநரம **மண்டலாகார சக்ராகிருதவட்ட சுத்தப்பிரம்மாகாசம்,** அல்லது **சர்வஸ்தான வியாபித சக்ராகிருதவட்ட பிரம்மக் ஞானுகாச** மாகும

இந்சிசயமானதன்மேல், தன்னுடைய **பிரம்மக் ஞானசமாதி** உலக முழுதுமாயப பிரகாசிக்கற்கு **ஓம் பாரபர பரப்பிரம்ம பரமசிவத்தினுடைய தய**வைக் கோரிக்கொள்ள வேண்டியது. எவ்வணமேல், தனது சிநதை பராகாசததினிறக தேவதா ஸதுதி செய்யவேண்டும் பிறவும், அதுவே தானாய் எக்காலுந தாரகமா யிருக்கவேண்டிய தனமைக்காக, * மஹாவாக்கிய ஸ்லோகததையுஞ் சொல்லிக் கொள்ளவேண்டும்

இநத ஞான சிவராஜ யோகானுபூதிக்கு ௮௨ - விதட பெயாகளுண்டு

**விவாம்.—**

க ஜாக்ரப் பிரணவ யோசம்.

உ. சொறபன நிராகார யோகம்.

ந. ஷுஷுபதி ஓஙகாரயோகம்.

ச. துரிய பிரம்ம ஞான கலாயோகம்.

ரு. துரியாதீத வாசியோகம்.

சு. உக்ரட பிரமம பாவனயோகம்.

எ. உக்ராதீத ஞானலக்ஷிய தியானயோகம்.

அ. { மௌனப பிரம்மஞான திருஷடி யோடாசன சிவராஜயோகம்

---

* இப்புத்தகக் கடைசியி லறிக

கூ. மௌனாதீத பரோக்ஷப் பிரம்மக்ஞான சிவயோகம்.

க0. சாந்த சாவசித்தி சொரூபயோகம்.

கக. சாந்தாதீத சாவசித்தி அங்கிஸயோகம்.

கஉ. சர்வ சர்வ ஐக்யலயபோத ஏகசாக்ஷாத்கார மய யோகம் என்பவைகளாம்.

மேலே வகுத்திய ஆகாசம்.—(க) ஒரு சர்வசூன்ய ஞானாகாச மாத்திரம். அதாவது ஸ்தூல பார்வைக்குத் தோற்றுகிற (ஸ்தூலாகாசம்) மாயாகாசமுமல்ல, இருட்டாகாசமுமல்ல, வெளிச்சாகாசமுமல்ல. அந்த ஞானாகாசம். அந்த பிரமமாகாசம். அந்த சிதம்பரவெளி. இதற்கு யாதொரு வர்ணமுமில்லை. எல்லையுமில்லை. (உவமானம்) துல்லியமுமில்லை. அதுவே.—

(உ) சர்வஞான வியாபகமாத்திரம்,

(௩) சுத்தஞான சாக்ஷிமாத்திரம்,

(௪) சர்வ பரிசுத்தப் பிரமமக ஞானானந்தமாத்திரம் என்றுமாம்.

இந்த சதுர்விதமும் தன்னுடைய தன்மையால் ஒன்றுதான். ஆனால், நான்குவகைப் பிரகாசமாத்திரமுளது

## விவரம்.—

(க) தன்னிடத்தும் மற்றுங் கீழ்மேல் (நடு) நாடபண் என்ற சமஸ்த உலகங்களிலும் பரிபூரணமாய் நிறைந்துள்ள சர்வானுஸ்யூத வியாபிதா அந்தர்யாமித்வமயம்.

(உ) முழுதுஞ் சூன்யமானதாய் எங்குமுள்ள ஞான திருஷ்டியாகிய அண்டபிண்ட மண்டலாகார சர்வ சூன்யாமய சுத்த ஸ்வயக்ஞான திருஷ்டிப்பிரகாச மாத்திரம். இதில் யாதொன்றைப் பார்க்கவாவது வைக்கவாவது பெற்றுக்கொள்ளவாவது தகா.

(௩) எங்கணு நிறைந்துள்ள போதமாகிய அண்ட பிண்ட சராசர சர்வமண்டலாகாராநுபூத சர்வ வியாபகமாத்ராம் இதில் மயிர் முனை நாட்டமுக்கு மிட மின்றி நிறைந்த பிரகாசமுண்டு.

(௪) எவ்விடத்தும் வியாபகமான ஒரு வெளிச்சமா யுள்ள சர்வ அண்டபிண்ட சராசர மண்டலாகாரா நுபூத சர்வசாக்ஷியாத்ராம். இஃது மாயாசக்தியின் காரியமாகிய பிரபஞ்ச வியாபாரங்க ளனைத்தையுஞ் சா க்ஷியா யிருந்து ரக்ஷணிக்கத் தக்கதும், ஆத்மாக்களி லும் சிருஷ்டிகளிலும் நடந்த நடக்கிற நடக்கப் போகிற காலத் திரயத்துக்குஞ் சாக்ஷியா யுள்ளதும், யாவத் உல கங்களையுங் கண்டுபிடிக்க ஆகமுள்ள எல்லா ரகசியங்களை யும் வெளிப்படுத்த நிமித்தகாரமாயுள்ளதும், இல்லதையும் உள்ளதையும் அறிவிக்கத் தக்கதுமான அமல ஞானருசுந் தப்பாரவை

இவ்வித ஞானகா யுள்ளது தானே,

(௫) ஆத்மாக்க ளெல்லாத்தும், சிருஷ்டி யெல்லாத்தும், தனனிலையிற்றானே மாயையென்ப தில்லாமல் விபுவா யெங்கு நிறைந்திருக்கிறதுமான திருஷ்டி ஒன்றுயிருக் கும். இதை அண்டபிண்ட சராசர சர்வமண்டலா கார சர்வாகித ஐக்யாமய சர்வானுபூத சதா அநுதி நித்யப் பிர்ம்மாநந்த மாத்ராம் என்றியம்பப் படும்.

மூலம்.——அதினுடைய எல்லா வட்டாகாரங்களினும் நித்யாநந்த தத்வஞான வட்டாகாரமா யிருக்கிறதுமன்றி மாயையென்றும் சிருஷ்டியென்றும் இருக்கற் கிடமில் லாமல் சர்வ அந்தர்யாமித்வ, சர்வ வியாபித, சர்வானு பூத, சர்வசாக்ஷி, சர்வாநந்தமய பிரம்மஞான சுப்ர மயமாய் பரமாத்மாவே நிறைந்து அழுந்தமா யிருந்து கொண் டிருக்கிறதா லென்றோர்க. இந்தப் பிரம்மக் ஞான திருஷ்டியும் மேனிகழ்த்திய சதுர்வித திருஷ்டி யுஞ் சேர்ந்து ஐந்து ஞானதிருஷ்டி யென்றுசு.

இவ்வைகளையும் ஒன்ருக வுள்கவேண்டுமே யன்றி, விகற்பமா யுள்கொணு. இதற்கு, செவி - உடம்பு - நயனம் - வாய் நாசி என்ற ஐந்தாலு மறியப்படும் விஷயங்கள் துண்டு துண்டேயாயினும், அறிந்த ஆதமா ஒன்ருகக் காணப்படுவதே சான்று. இன்னணம் ஒரோகாகூழியான இரகசியத்தில் சர்வ மாயா திருஷ்டிதரிசனங்களை உண்டென்று பாவித்தால் அவைகளினும் அஃது சம்பூரணமாய நிறைந்தே யிருக்கும். இஃது பிரதமத்தில் ஒரு எல்லைக குடபட்டது போன்றே தோற்றும். துவைதம் ஒருங்கி அசங்க அதுவைதமாயின ஏகமாயிருக்கும். அதுவே **சிவஞானதீபம்.** அந்தத தீபததைத தரிசிப்பதத தீரககதரிசனம். அத்தை விரும்பினோ **பிராந்தி மாயாகாசததை** நீககி பிரமக்ஞாருகாசததை நீககா திருக்கவேண்டும். எறறுககேல், அருமையாகிய இந்நூலைப் படிததும் வீண்காலங கழிததோனுககு ஒன்றும் கிடடா தொழிதல் போன்று அததை நீககினவருக்கும் பிரம்மக்ஞானங் கிட்டா. டேசிய பிரம்மக்ஞானத்துக்குள்ளேயே, அஃது பிரமமக்ஞானமாகும். ஏனைய ஆகாசம்.—மலாகாசமும், (மிதைதை) பொய்யானது மாம். அஃது பேதங்காட்டிய போதந தெரிய வொட்டாது வஞ்சிக்கும்.

ஆதமொடு (மரணம்) யுகிமாலின யானதின்பேரில் ஊாததலோக போகங்க ளாகிய சுவர்க்க வாழ்வையாவது, தேவதண்ட நரக யாதனையையாவது, அல்ல திரண்டையு மாவது அளவுப்படி யனுபவிதது மீணடும் நாமரூப ஜடமெடுதது ழலா திறபதறகு ஹேதுவாகிய அனுத்த அனுசிதசகித பிரபஞ்ச வெளிநோககைப போக்கி அனாதமும் உண்மைக்காகவே சர்வோபாதி சூன்ய சமஷ்டியாநந்த சகித சிவ அருளவசத்தாய் ஞேயத தமுந்தி மேனிகழ்த்திய சிவஞானதீப கைவல்யானுபவத்தை இஞ்

ஞான்றே கைக்கொண்டு விமல விதேக முக்தியை விவேகிக ளெவ்வருஞ் சம்பூரணமா யெய்தி யுய்வார்களாக. அமல சமாதி கூடுதற் கரிதாயின், அருளிலே யழுந்தி நின்றேனு முய்வார்களாக. அஃதுங் கூடாதாயின, பூதீ முதல் நாத பரியந்தம் பொய்யென் றுணர்ந்து நீங்கித் தன்னைத் தரிசித்துத் தானும் அருளு நிற்குந் தரமறிந்து அருளே நாவாக தாரக மந்தரமாகிய முக்தி பஞ்சாக்ஷரத்தையேனும், ஷடாக்ஷரத்தையேனும ஜெபியாமல் ஜெபித்துய்வார்களாக. அஃதும் கூடாதாயின, ஞான நூலோதியுஞ் சிந்தித்தும் உட்பூஜையாகிய அந்தரியாகம் புரிந்துய்வார்களாக

சிவஞானதீபம் முற்றிறறு.

சிவஞானதேசிகன திருவடிவாழ்க.

---

ஓம் தத் சத்.

இந்நூ னிச்சயார்த்தத்தி னிறைறும் யாதொரு சந்தேக விபரீதத்தைத் தெளிந்து கொளற்கு ௩௨ - வியாசங்களாய் குருசிஷ்ய சம்வாத ௧௦௦௦ - கேள்வி யுத்தரங்களா யுள்ள **சிவஞானதேசிகத்தைப்** பார்க்கக் கடவது.

MAHAMAHOPADHYAYA
...NATHA IYER LIBRARY